# திராவிடநாடு

ARIVOLI AGENCIES
...IDAMBARAM

## எழுவாய் தமிழா!

மறமேவிய புலியேநிகர் தமிழா! விழித் தெழுவாய்!
உறங்காதினி உழைப்பாயெனில் பெறுவாயுன தாட்சி!
திறமேவிய தமிழேதனை அரியாசன மேற்றி
அறமேவிய வாழ்வேகொள அமயமிதை யுணராய்!


உரமேறிய திணவேயுடைத் தோளானென் தமிழா!
அரவேநிகர் பகையேதனை அறவேவே ரறுப்பாய்
விரவும்பகை உறவாயினும் தயங்காதினி வீழ்த்தி!
சுரக்கும்பல நலனும்பொழி பணிகள்நனி புரிவாய்!

வடவர்பிடி விடுபெற்றினி தெழுவாயிது சமயம்!
திடமாய்மிக உழைப்பாயெனில் பெறுவாய்பல நலனும்.
கடமையென மொழியுந்திரு விடமும்நீ காக்க
தடைகள்பல வரினுமுடைத் தெறிவாயிகல் வெல்வாய்!

விழியாமுயர் அறிவுப்பணி புரியும்பல மனையும்
தொழில்கள்பல இயற்றுந்தொழில் மனையும்நனி நிறைவாய்
செழிக்கும்வகை பணிகள்பல புரிவாயெனில் உலகில்
கொழிக்கும்புகழ் அடைவாயிது உணர்வாய்துடித் தெழுவாய்!

—மலையமான்

2
அணா



# உன்னால் முடியும்

**தம்பி,**

எந்தப் பிரச்சினையும் நினைவிற்கு வரவில்லை; நெஞ்சமெலாம் துக்கம் துளைத்தெடுக்கிறது—திகைப்பு தாக்குகிறது — வேதனைப்படு! வேதனைப்படு! வெற்றி ஒளியின் கிறல்களைக் காண்கிறேன்! உள்ளத்தில் உறுதிகொண்டோரின் அணி வகுப்பு காண்கிறேன்! விடிவெள்ளி காண்கிறேன்! என்றெல்லாம் எக்களித்துக் கிடக்கும் ஏமாளியே! வேதனைப்படு! வேதனைப்படு! ஒன்று இரண்டா உனக்கு வந்துறும் துயரங்கள்! எதை எதைத் தாங்க வேண்டும் என்பதறியாமல் ஏதேதோ பேசிக் கிடக்கிறாயே! பித்து மனம் கொண்டோனே! இதோ பார் உன் கண்ணெதிரே, வெறிநடமிடும் அழிவினை!—என்று கொக்கரிக்கிறது நிலைமை. கண்களைத் திறந்து கிடப்பினும், மூடிக் கிடப்பினும், பேசாது கிடப்பினும், ஏதேனும் பேசிக்கொண்டிருப்பினும், தனிமையிலமர்ந்து தாங்கிக் கொள்ள முயற்சித்தாலும், துக்கத்தைப் பகிர்ந்துகொள்ளப் பிறருடன் பேச்சில் ஈடுபட்டாலும், பெற்றோரின் பேரன்பு, துணைவியின் கொஞ்சு மொழி, குழந்தைகளின் மழலை, இசை, இன்ப நினைவுகள், எதைத் துணைக்கு அழைத்தாலும், எல்லாம் தோற்றோடுகின்றன, துக்கம் எல்லாவற்றையும் துரத்தி அடிக்கிறது — இமை திறந்திருப்பினும் மூடிக் கிடப்பினும், எதிரே தெரிவதெல்லாம் பேய் மழை, சூறைக் காற்று, கடற் கொந்தளிப்பு, பிணக் குவியல்; அழிவு, அழிவு!

எதையும் தாங்கும் இதயம்வேண்டும்—தம்பி! ஆயிரம்முறை கூறுவேனல்லவா இதனை! தாங்கிக் கொள்ள பழகிக்கொண்டுகூட இருக்கிறேன்—எனக்கென்று வரும் ஆபத்து, துக்கம், இழிமொழி, இன்னல், பழி இவைகளை. ஆனால், இது தம்பி! என்னால்மட்டுமல்ல, எவராலும் தாங்கிக்கொள்ள முடியாத பேரிடி! நூற்றுக்கணக்கான கிராமங்களே காணோமே! நகரங்கள் பலவும் களத்தில் படுகாயமுற்றுக் கிடக்கும் வீரர்போல! ஆயிரம்பேர் கொல்லப்பட்டுப் போயினராம்! ஐயகோ! எப்படி இதைத் தாங்கிக் கொள்ள இயலும்? எதை எண்ணி இதயத்துக்குச் சாந்தி தேடிக் கொள்ளமுடியும்? யாரை நோவது? யாரைச் சுட்டிக் காட்டிச் சாடுவது? தாமரை பூத்த தடாகமான தஞ்சையில், வெள்ளத்தில் அழுகிய பிணங்களடா தம்பி! பிணங்கள்! பேசிவிட்டுப் படுத்திருப்பான், கொஞ்சிக் குலாவிவிட்டுப் படுத்தாளே பாவை, மார்புடன் அணைத்துக் கொண்டாள் மதலையை, வெண்ணெய் காய்ச்சின நெய் கலந்த சோறு காணவிடினும், அன்னையின் அன்புகலந்த உணவினை உண்டு உறங்கினர் சிறார் — அவர்களைச் சூழ, அவர் தம் உழைப்பினைப் பெற்று, செந்நெற் பயிர் ஆடிக் கிடக்கிறது, 'இளநீர்' சுவையுடையதாக இருக்கலாம், தென்னையே! நீயோ, அதனைச் சுலபத்தில் மக்களுக்குத் தரமனமின்றி உயரத்தில் வைத்துக்கொண்டு கிடக்கிறாய், நான் அவ்விதமல்ல, என் உள்ளம் இளகியது, இதோ பார், கனிகளைப் பெற வருபவருக்குக் கஷ்டம் அதிகம் தரக்கூடாது என்று எந்த அளவில் நிற்கிறேன்! — என்று கதலி தென்னைக்குக் கூறுகிறதோ என்று எண்ணத்தக்க நிலையில்! நாளைக் காலையில் இதைச் செய்யவேண்டும், இவ்விதம் செய்யவேண்டும் என்று — பேசிவிட்டுப் படுத்தனர், உழைத்திடும் அந்த உத்தமர்கள். அந்தோ! அந்தோ! அவர்கள் காலையில் கண்டது கதிரவனை அல்ல — அவர்களைக் காலை வரையில்கூட விட்டுவைக்கவில்லை சாவு, பற்றி இழுத்துக்கொண்டு சென்று சின்னபின்னமாக்கிவிட்டது. கடலிலே கொந்தளிப்பு! பேய்க் காற்று வீசுகிறது, பெரு மரங்கள் சாய்கின்றன வேரறுந்து; தோப்புகள் சிதறுகின்றன!—பெரு மழை பெய்கிறது — இருள் கப்பிக் கொள்கிறது—வயலெல்லாம் ஏரிகளாகி, ஏரிகளெல்லாம் கடலாகி, வாய்க்கால்களெல்லாம் ஆறுகளாகி, ஆறுகளெல்லாம் அழிவு தருவனவாகி, எங்கும் வெள்ளக் காடாகிறது! தூக்கம் கலையுமுன் பேரிடி மனதைப் பிளக்கிறது—உயிர் காத்துக்கொள்ள முயற்சிக்குமுன்பு உருத் தெரியாதபடி, வெள்ளம் மக்களைக் கொள்ளை கொள்கிறது. தம்பி! நாசம் விளைவித்துள்ள அளவுமட்டுமல்ல, அதன் வேகம் திடுக்கிடவைப்பதாக இருக்கிறது. எனவேதான், இத்தனை அளவு உயிரிழப்புகள் — பொருட்சேதம்— அழிவு.

கடல் நீர் ஊருக்குள் படை எடுத்தால், கதிகலங்கிப் போகாமல் என்ன செய்ய இயலும் — எட்டடி பத்தடி உயரத்துக்கு எழும்பி, பேரிரைச்சலுடன் அலைகள் ஊருக்குள்ளே படை எடுக்கும்போது, பீதி போதும் கோழைகளுக்கு, நமது உடன் பிறந்தோர் வீரமாகப் போரிட்டுப் பார்த்திருக்கிறார்கள்—ஒன்றைச் சமாளிப்பதற்குள் மற்றொன்று—என் செய்வர் — கடல் அலைக்குத் தப்பிட, ஒதுக்கிடம் தேடிச் செல்லலாமென்றாலோ, பாதைகள் அழிந்து பட்டுப்போய் எங்கும் வெள்ளம், பெரு மழை தாக்கியவண்ணமிருக்கிறது பேய்க்

(14-ம் பக்கம் பார்க்க)

ஆண்டுச் சந்தா ரூ. 7

திராவிடநாடு

மலர் 14] 11-12-55 [இதழ் 23

புயற்கொடுமைக்கு ஆளானோருக்கு, எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திராவிட நாடு குழுவினர்.

# அந்தத் தைரியம்!

உதட்டோரம் வழிந்தோடும் புன்னகையின் பொருளை, அவர்கள் புரிந்துகொண்டால், ஆர்ப்பாட்டங்கள் எதுவும் தேவையில்லை. கனல் கிளம்பக் கிளம்பச் சிரிக்கிறார், அவர்-ஆத்திரத்தைக் காணக் காண கேலியுடன் பதிலளிக்கிறார், தோழர் குருஷேவ்.

இந்தியாவுக்கும், பர்மாவுக்கும் ரஷ்யத் தலைவர்கள் வந்தது கண்டு, மேற்கத்திய நாடுகளுக்கு-குறிப்பாக அமெரிக்காவுக்கு—ஆத்திரமும் அருவயையும் அதிகமாகியிருக்கிறது. பிரிட்டிஷ் ஏடுகளிலே யூகங்கள் - அமெரிக்கப் பத்திரிகைகளிலே அனல் கிளம்பும் தாக்குதல்கள் அதிகமாகத் தென்படுகின்றன. கை பிடித்த காதலி மாற்றானுடன் சென்றுலவுவதைக் காண்போனுக்கு என்ன மனமருட்சி ஏற்படுமோ அந்த அளவுக்கு ஏற்பட்டிருக்கிறது அமெரிக்க பூபதிகளுக்கு.

ரஷ்யத் தலைவர்களை, இந்திய உபகண்டத்துக்கும், பர்மாவுக்கும் அழைத்துவந்து, 'கண்காட்சி'போல செய்யப்பட்டிருக்கும் இந்த வைபவங்களுக்குப் பின்னால் ஒளிந்துகிடக்கும் உண்மைகளை, அரசியல் தெளிவு கொண்டோர் அறிவார்கள். நேரு பண்டிதருக்கு, இந்தியாவில் எதிர்க்கட்சியென்று குறிப்பிடக்கூடிய அளவில், கடந்த தேர்தலில் உருவான கம்யூனிஸ்டுக் கட்சியின் மூக்கையறுக்கும் அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஏனெனில், விரைவில் பொதுத் தேர்தல் வந்துகொண்டிருக்கிறது. அது மட்டுமின்றி, அமெரிக்கர்கள், பக்கத்து நாடான பாகிஸ்தானிடம் காட்டிவரும் பரிவும் நேசமும் அவரது கண்களை நாள்தோறும் கரிக்காமலில்லை. முஸ்லீம்களின் நாடான பாகிஸ்தானுக்குச் சவால்விடுவதுபோல, ''பார்! இதோ எகிப்து; அதோ, என் உறவைப்பெற்றிருக்கிறது பார், இந்தோனேஷியா; ஆப்கானிஸ்தானமாம் அண்டை நாடும் எனக்கு நண்பன்; சவூதி அரேபியா, வளம் கொழிக்கும் மன்னர் என்பக்கம்!'' என்று பல முஸ்லீம் நாடுகளைத் தன் தோழர்களாக்கிக்கொண்டிருக்கிறார் பாகிஸ்தானின் தலைவர்கள், அவ்வளவு பக்குமற்றவர்களாயிருப்பதன் விளைவால், அண்டை நாடான ஆப்கானிஸ்தானைக்கூட சமரசமாக வைத்திருக்க இயலவில்லை. இதனால், பல முஸ்லிம் நாடுகள் நேரு பண்டிதருக்குச் சிநேகமாயிருக்கின்றன. இந்தச் செல்வாக்கைக்கொண்டு ரஷ்யாவுக்கும் இந்த நாடுகளின் தோழமையைப் பெற்றுத் தர முயற்சித்து, ரஷ்யாவின் பாசத்தையும் பெற்றிருக்கிறார். ரஷ்யாவுக்கு இது இலாபம்தானே! அதனால், இந்தியாவின் இறந்தகால அரசியலையோ, நிகழ்கால நிலைமைகளையோ பொருட்படுத்தாது புதிய இராஜதந்திரிகளாகியிருக்கின்றனர். நேரு பண்டிதர்மூலம், இந்தியாவின் மக்கள் மன்றத்துக்குள், ரஷ்யாவின் பேரையும் புகழையும் நிலை நாட்டமுடியும் என்கிற நம்பிக்கை' அவர்களுக்குண்டு.

புல்கானினும், குருஷேவும் 'விஜயம் செய்த பர்மாவும் சொர்க்கலோக பூமியாக இல்லை. கரீனியர்களின் விடுதலைக் கிளர்ச்சிகள் இன்னும் அடங்கவில்லை. புல்கானினும் குருஷேவும் மலையடிவாரத்துக் கருகிலுள்ள ஒரு ஊருக்குச் சென்றிருந்தபோது அந்த ஊரைச் சுற்றி ஆயுதம் தாங்கிய படைகள் 'ரோந்து' வந்த வண்ணமிருந்தனவாம்—எங்கே, கிளர்ச்சிக்காரர்கள் காடுகளிலிருந்து வந்து கலவரம் உண்டாக்கிவிடுவார்களோ எனும் அச்சத்தால். அதோடு நூ சர்க்கார், பர்மாவுக்கு விடுதலை பெற்றுத் தந்த கட்சியைச்சேர்ந்த தென்றாலும், ஆண்டுகள் எட்டாகியும், மக்கள் மன்றத்தில் பழைய நிலைமைகளே நீடித்து வருவதால், அதிருப்திக்கும் மனக்குறைவுக்கும் ஆளாகிவருகிறது. நூவுக்கும் அதிர்ச்சி வைத்தியம் செய்யவேண்டிய அவசியம் உண்டாகியிருக்கிறது. ஆதலால்தான், ரஷ்யத் தலைவர்களுக்கு, இவ்வளவு சிறப்பான வரவேற்புகள்.

''ரஷ்யா! ரஷ்யா! புது உலகுப் பூஞ்சோலை—அங்கே ஏழையும் பணக்காரனும் சமமாம்—இன்பம் பொங்குமாம்'' என்று பொதுவாக ஏழைகள் மலிந்த இந்தியாவிலும் பர்மாவிலும் மக்கள் கருதிக்கொண்டிருக்கிறார்களல்லவா, அதனைத் தமக்குச் சாதகமாக்கிக்கொள்ள முனைகின்றனர் நேருவும் நூவும்.

இந்த உள்ளெண்ணங்களைகுருஷேவும், புல்கானினும் அறியாமலிருக்க முடியாது; ஏனெனில், அவர்கள் புரிந்துகொண்டிருக்கும் அரசியல் பாடங்களும், தெரிந்து வைத்திருக்கும் வரலாறுகளும், அதிகம். ஆனாலும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு மக்கள் மன்றத்தின் நாடி நரம்புகளைத் தட்டிவிட்டிருக்கிறார்கள். அமெரிக்காவுக்கு தமக்கிருக்கும் செல்வாக்கை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.

அதனால்தான், அமெரிக்கா கனல் கக்கப் பேசுவதைக் காணும்போது களிப்பு வருகிறது, ரஷ்யத் தலைவர்

களுக்கு. டல்லஸ், சீறச் சீறப் புன்சிரிப்பு அதிகமாகிறது.

பம்பாயில் அளிக்கப்பட்ட வரவேற்பின்போது குருஷேவ், எள்ளி நகையாடுவதுபோலச் சொன்னார், "நாங்கள், இந்தியாவுடன் நட்புக்கொள்வதைக்கொண்டு பலர் எரிச்சலடைகிறார்கள். எதற்கெடுத்தாலும் அவர்கள் எங்களுடன் போட்டிபோடவே விரும்புகிறார்கள். ஏன்? இந்த விஷயத்திலும், போட்டியிடட்டுமே! என்பதாக.

இந்தியாவிடம் அன்பு செலுத்துகிறோம். நீயும் அதிக அன்பைக் காட்டி உன் செல்வாக்கை நிலை நாட்டிக்கொள்ளேன்–என்றார், குருஷேவ்.

அவர் திடமாக நம்புகிறார், நேரு பண்டிதரும் அவரது சகாக்களும் எப்படியிருந்தாலும், இந்திய மக்கள் மன்றம் எப்படிப்பட்டது–அது எந்தக் கூடாரத்தின் பக்கம் சாயும் என்கிற உண்மையை. அதனாலேயே, பம்பாயில் வெளியிட்டார், "நான் முதலாளி வர்க்கமுறையை வெறுக்கிறேன். சோஷலிச முறை சிறந்ததென்று நம்புகிறேன். சோஷலிசம் தான், வாழ்வதற்குப் பிறரது அனுமதியைக் கேட்கும் அவசியத்தில் இல்லாமலிருக்கிறது. நாம் வாழ்வதற்கு எவரது அனுமதியையாவது கேட்கவேண்டிய நிலை ஏற்பட்டால், நாம் நசுக்கப்பட்டுப் போவோம்" என்று வெளியிட்டார். அவ்விதம், உறுதியோடு வெளியிட்டது மட்டுமல்ல, ஒரு நாட்டின் 'ஜீவநாடி' எது என்பதையும் தெளிவாக எடுத்துச் சொன்னார், பெங்களூரில். "எங்களது தேசத்தின் பலமும் சக்தியும் யாது? அது, எங்கள் மக்களிடம் உள்ள பலமும் சக்தியும்தான்! எமது மக்களின் பலம் தான், எங்களது பிரதானமான முதலீடு. மக்கள்தான் மனிதரால் சிருஷ்டிக்கப்படும் சகலவற்றையும் உற்பத்தி செய்கின்றனர்"

மக்களே, மகத்தான சக்தி–இது ரஷ்யாவின் எண்ணம்.

பணமே, பிரதான சக்தி––இது அமெரிக்காவின் கருத்து.

பணத்தால்எல்லாவற்றையும்சாதிக்கலாம் எனும் தைரியத்தாலேயே, அமெரிக்கா இதுநாள்வரை இருந்து வருகிறது. முதலாளித்துவத்துக்கு 'மூலபலம்' அதைத் தவிர வேறென்ன இருக்கிறது.

அந்தப் பணதிபத்யத்தை, மக்கள் சக்தி எப்படி சுக்கல் சுக்கலாக்கியது என்பதையும் குருஷேவ் விளக்கத் தவறவில்லை.

"நாங்கள் புதிய அரசை ஏற்படுத்த விரும்பியதும், எங்களை ஒழிக்கத்தான் மேற்கத்திய நாடுகள் முயன்றன. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி எல்லாம் அந்த முயற்சியிலேயே ஈடுபட்டது. ஆனால், வீட்டுக்கார அம்மா குப்பை கூளங்களைக் கூட்டி வெளியே தள்ளுவதுபோல அவர்கள் எதிர்ப்பையெல்லாம் கூட்டியெறிந்துவிட்டோம்! எதனால்? எம்முடைய மக்கள் சக்தியால்!"

ஆலைகளைக் கட்டினோம்; சாலைகளை அமைத்தோம்; கல்விக்கூடங்கள் உண்டாக்கினோம்; அணைக்கட்டுகளைக் கட்டினோம்; பிற நாடுகள் கண்டு வியக்குமளவுக்கு முன்னேறிவிட்டோம். யாவும் எதனால்? பொதுமக்கள் சக்தியால் என்கிறார், குருஷேவ்.

இந்தச் சக்தியை, இன்னும் அமெரிக்கா உணராததுதான் விந்தை.

அதனாலேயே, ரஷ்யத்தலைவர்களின் புன்சிரிப்பைக் கண்டு புகையும் எரிமலையாகி, அமெரிக்க வெளிநாட்டு மந்திரி டல்லஸ், போர்த்துகீசிய அமைச்சருடன் சேர்ந்து, "கோவா, ஒரு போர்த்துகீசிய மாகாணம்" என்று அறிக்கைவிட்டிருக்கிறார்.

எவ்வளவு பெரிய பொய்! சாதாரண குடிமகன்கூட கெக்கலிக்கத்தானே செய்வான்?

"அவ்வளவு ஆத்திரம் எனக்கு. அவர்கள் மட்டும் எப்படிப் பேசலாம். அதனால்தான், இப்படியொரு அறிக்கை விடுத்தேன்" என்று வியாக்கியானம் வேறு அளித்திருக்கிறார்.

ஆத்திரமும், அசூயையும், பணத்திமிருமே, முதலாளித்துவத்துக்கு ஊன்றுகோல்கள். ஆனால், அதைவிடப் பெரிதானது, மக்கள் சக்தி—அது, நமக்குத்தான் கிடைக்கும் —எனும் தைரியம் இருக்கிறது, ரஷ்யத் தலைவர்களுக்கு.

மகத்தான மக்கள்சக்தியை அடைய முதலாளித்துவ முறைகளால் ஒரு போதும்முடியாது. அதனாலேயே, குருஷேவ், புன்னகையோடு சொல்லுகிறார், "வேண்டுமானால் எங்களுடன் போட்டியிடுங்களேன்" என்று–அமெரிக்காவைப் பார்த்து.

அங்கு ஆத்திரம் அதிகமாக அதிகமாக, இங்கு புன்சிரிப்போடு பவனி வருகிறார்கள், புதுயுகம் கண்ட தலைவர்கள்.

★

# கவலையும் கானமும்!

★

"என்ன இருந்தாலும் நம்முடைய பக்கத்து நாடு பர்மா! அதனுடைய நன்மை தீமைகள் நமக்கும் உண்டு. நூ, நமக்கு மிகவும் வேண்டியவர். அவருடைய நாட்டுக்கு 20 கோடி கடன் கொடுத்தால் என்ன?", என்றே கூறினார், நேரு பண்டிதர். பர்மாவுக்கும், இந்தியாவுக்குமிருக்கும் தொடர்பு அவ்வளவு அன்யோன்யமானது என்று காட்டிக் கொண்டார். இப்போதும், அதுபோலவே சொல்லுகிறார். அந்தப் பர்மாவில் கடந்த 19-ந் தேதி 700 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்! 700 தோட்டித் தொழிலாளர்கள்!! இங்கேயிருந்து போய் அங்கே பிழைப்புக்காக இத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்கள். பர்மிய சர்க்கார், பிறப்பித்திருக்கும் புதிய உத்தரவை எதிர்த்து வேலை நிறுத்தம் செய்து, தங்கள் கண்டனத்தைக் காட்டியிருக்கிறார்கள். அவர்கள் சம்பாதிக்கும் பணத்தை, இங்கே அனுப்பக்கூடாதாம்! அவர்களுடைய மனைவி; மக்கள் பர்மாவில் குடியேறியிருந்தால் இந்த உரிமை கிடையாதென்பதே அச் சட்டம். தோட்டித் தொழிலாளர்கள், பர்மாவைச் சுரண்டியா, இங்கே அனுப்பபோகிறார்கள்? அவர்களென்ன, பனியாவா, சேட்ஜியா, வயிற்றுக்காக ஓடியிருக்கும் வறுமையின் பிம்பங்கள்தானே! அவர்கள் சிறு தொகையும் அனுப்பலாகாது, என்று சர்க்கார் தடை பிறப்பித்திருக்கிறார்கள் "அப்பா அம்மா இந்தியாவிலிருக்கிறார்கள்! அவர்கள் எங்களுடைய பணத்தைத் தானே எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். இப்படி சட்டம் போட்டுவிட்டீர்களே?", என்று கவலைப்படுகிறார்கள், அவர்கள்! 'கனம்' நேருவோ, அவர்களுக்கும் நமக்குமுள்ள அன்யோன்யத்தைப் பற்றி வர்ணிக்கிறார்—ரூ. 20 கோடி கடனுதவும் அளிக்கிறார்!!




யாத்திரை செய்து வருகிறார், 'கல்கி' யின் கட்டுரையாளர் ஒருவர்.

வழக்கமான திவ்விய க்ஷேத்திர யாத்திரை அல்ல; நேருபண்டிதருடைய கருத்துப்படி எவையெவை திவ்விய க்ஷேத்திரங்களோ, அங்கெல்லாம் யாத்திரை!

அணைகள், தேக்கங்கள், ஆராய்ச்சிக் கழகங்கள், தொழிற்சாலைகள், ஆகியவைகளைக் கண்டுவர 'யாத்திரை' செய்கிறார். 'பாரதம்' பண்டிதருடைய பரிபாலனத்தில் எத்தகைய மகோன்னதமான நிலையை அடைந்திருக்கிறது என்பதை, காங்கிரசாட்சியைக் கண்டித்துப் பேசும் கெடுமதியாளர்களுக்கு, விவரமாக, விளக்கமாக, பாடம் காட்டும் படங்களுடன், பரவசப்படச் செய்யும் புள்ளி விவரங்களுடன் எடுத்துக் கூறி அவர்களைத் திருத்த வேண்டும், நல்வழிப்படுத்த வேண்டும் என்ற 'சிலாக்கிய'மான நோக்கத்துடன் இந்த யாத்திரையை மேற்கொண்டார்.

காடு மலை வனாந்திரங்களைக் கடந்துசென்று, யாத்திரை நடத்தி வருகிறார்.

காணும் காட்சிகளும், கேள்விப்படும் 'சேதி'களும், இந்தத் தேசிய உள்ளத்தில் என்னென்ன கருத்துரைகளை ஊட்டுகிறது என்பது விளங்கத்தத்த வகையில் 'யாத்திரை'பற்றித் தொடர்ந்து கட்டுரைகள் வெளியிட்டு வரப்படுகிறது.

ஆச்சாரியாரின் மேற்பார்வையில் நடந்துகொண்டிருக்கும் ஏடு 'கல்கி'. எனவே அதிலே வெளியிடப்படும் கருத்துகள், காற்று வாக்கிலே போகக் கூடியவை என்று யாரும் அலட்சியப்படுத்திவிட முடியாது—கூடாது; காற்று எந்தத் திக்கிலே வீசுகிறது என்பதைக் காட்ட இக்கட்டுரைகள் பயன்படுகின்றன என்றும் கூறலாம்.

வடநாடு வாழ்கிறது, தென்னாடு தேய்கிறது என்றால், இங்கு தேசியத் தோழர்களின் கண்களிலே தீப்பொறி கிளம்புகிறது.

எல்லா வளமளிக்கும் திட்டமும் வடக்கேதான், தெற்கே இல்லையே என்று கூறும்போது அமைச்சர்களுக்குக் கோபம் கொந்தளிக்கிறது.

இவ்விதம் எண்ணுவதும் எடுத்துரைப்பதும், தேசிய விரோதமான செயலாகும் என்று பெரியவர்கள்—மன்னிக்க வேண்டுகிறோம் — பெரிய இடத்தில் அமர்ந்து கிடப்போர் — பேசுகின்றனர்— மீண்டும் மன்னிக்க வேண்டுகிறோம், பேசுவதில்லை, பேசுவதாக எண்ணிக் கொண்டு ஏசுகின்றனர்.

பண்டிதர், வடக்கு, தெற்கு என்று பேதம் பாராட்டுபவரல்ல, பாருக்கெல்லாம் பஞ்சசீலம் உபதேசிக்கும் எமது பண்டிதருக்கா இத்தகைய குறுகிய நோக்கம் எழும், பித்தர்காள்! பித்தர்காள்! அவர் ஆட்சியில் அநீதி தலைகாட்டாது, வீணுக்குப் பேதம்பேசாதீர் என்று அறிவுரை கூறுவதாகக் கிளம்பி இழிமொழியில் தாக்குகின்றனர்.

இதோ 'யாத்திரிகர்' தமது கருத்துரையை வழங்குகிறார்—தேசியத்தார் சுவைக்கவேண்டுகிறோம்.

**சி. என். ஏ.**

குடும்ப பாசம் இருக்கவேண்டாமோ!

எனக்கு எவ்வளவு? அவனுக்கு எவ்வளவு? என்று வம்புக்கு நிற்பது அழகாகுமா?

அவன் உன்னைவிடச் சற்றுச் சௌகரியமாக இருந்தால் வயிற்றெரிச்சல் படுவதா!!

என்றெல்லாம் சமரசம் பேசுவோர், 'யாத்திரை'யின் பலனாகப் பிறந்துள்ள கருத்தினைக் காண வேண்டும்—வெட்கமாகக்கூட இருக்கும்—பரவாயில்லை!!

*

**"பக்ரா அணையில் எவ்வளவு தூரம் தண்ணீர் தேங்கிநிற்கும் தெரியுமா? சென்னையிலிருந்து விழுப்புரம்வரையில் உள்ள தூரத்துக்கு தண்ணீர் தேங்கி நின்றால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள். சுமார் 100 மைல் தூரத்துக்குச் சமுத்திரம் போலத் தண்ணீர் தேங்கி அலைமோதிக்கொண்டு நிற்கும். இந்த அணையில் தேங்கும் தண்ணீரைக்கொண்டு 1 கோடி ஏக்கர் நிலத்தைத் திருத்திப் பயன்படுத்தலாம்.**

*

**இந்தத் தண்ணீரின் சக்தியைப் பிடித்து மின்சாரம் உற்பத்தி செய்வதற்காக அணையின் இரு புறங்களிலும் அருகி மின்சார நிலையங்கள் அமைத்து வருகிறார்கள். பத்து மின்சார இயந்திரங்கள் மின்சாரத்தை உற்பத்தி செய்யப் போகின்றன. ஒரு மின்சார இயந்திரம் மட்டும் தொண்ணூறு ஆயிரம் கிலோவாட்மின்சாரத்தை உற்பத்தி செய்யும்.**

*

**ஒரு திடமான மனிதன் ஓய்வு ஒழிவு இன்றி மூன்று நாள் செய்யும் வேலையை ஒரு கிலோவாட் மின்சாரம் ஒருமணி நேரத்தில் செய்து விடுமாம்.**

அதில் உற்பத்தியாகும்மின்சாரத்தை உபயோகிப்பதற்காக வேண்டி அங்கு பல தொழிற்சாலைகளும் கட்டுவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். எரு உற்பத்தித் தொழிற்சாலை, சர்க்கரை உற்பத்தித் தொழிற்சாலை, இன்னும் பலவிதமான சாமான்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் கட்டுவதற்கு வேண்டிய எல்லாப் பூர்வாங்க ஏற்பாடுகளும் செய்துவிட்டார்கள்.

*

ராஜஸ்தான பாலைவனத்தைச் சோலைவனமாக்கப் போகிறார்கள்.

*

பக்ரா கால்வாய்களின் கரையில் பத்து இலட்சம் ஜனத்தொகையுள்ள முப்பது அழகான நகரங்கள் உண்டாவதற்கு வசதி இருக்கிறதாம்.

*

பக்ரா அணையைக் கட்டுவதற்காக 40 புகழ்பெற்ற அமெரிக்க என்ஜினியர்கள் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய ஆலோசனைகள் பேரில் தான் பக்ரா அணை கட்டப்பட்டு வருகிறது.

*

அமெரிக்கத் தலைமை என்ஜினியருக்கு முப்பது நாளைக்கு, அதாவது மாதம் ஒன்றுக்கு வருமான வரி இல்லாமல் சுளையாகப் 12 ஆயிரம் ரூபாய் தருகிறார்கள்.''

*பக்ரா நங்கல் திட்டம் பற்றிப் பரவசப்பட்டுத்தானே யாத்திரிகர் எழுதுகிறார், என்று எண்ணுவர்; அவர், அவ்விதம் பரவசப்பட்டு விடாதீர்கள், இவைகளெல்லாம் உள்ள இடம் 'நம் நாடு' அல்ல; வடநாடு! அது நினைப்பிலிருக்கட்டும்; நானும் என் நண்பர்களும் இந்த அற்புதமான பக்ராவைப் பார்த்துக்கொண்டிருந்தபோது புன்னகை பிறக்கவில்லை, பெருமூச்செறிந்தோம், பாரதம்! பாரதம்! என்று பேசுகிறார்கள் இந்தத் தலைவர்கள்; ஆனால் ஓரவஞ்சனைதான் நடக்கிறது. என்னென்ன திட்டங்கள், எவ்வளவு அருமையான திட்டங்கள், எத்தனை நூறு கோடிகளைக் கொட்டுகிறார்கள், எல்லாம் வடக்கேதானே, நமது 'ஜென்ம பூமியில்' இதுபோன்ற ஒரு திட்டமும் கிடையாதே, நாமும் ஓயாமல் சளைக்காமல் பாரதம் ஒரே நாடு, பண்டிதர் அதன் ஒப்பற்ற தலைவர் என்று சிந்து பாடுகிறோம், இங்கே பக்ரா நங்கல், அங்கே...? என்று எண்ணி எண்ணிப் பொருமினோம் என்றெல்லாம், கட்டுரையாளர் நண்பர்களிடம் பேசுவார்— 'கல்கி'யில் அதே போலவா எழுத முடியும், 'மறைதிரை' வேண்டாமா, ஆகவேதான், சூட்சம புத்தி உள்ளவர்களுக்கு இவ்வளவு சொன்னாலே போதும் என்ற எண்ணத்துடன் கட்டுரையாளர் குறிப்பிடுகிறார்.*

"என்னுடன் வந்த தென்னிந்தியப் பத்திரிக்கையாளர் மட்டும், எல்லாம் இங்கேதான் செய்கிறார்கள். வட இந்தியாவில் செய்திருப்பதுடன் ஒப்பிட்டால் தென் இந்தியாவில் ஒன்றுமே செய்யவில்லை என்றுதான் தோன்றுகிறது. பணத்தைப் பணம் என்று பார்க்காமல் வாரி இறைக்கிறார்களே என்று ஓயாமல் சொல்லிக்கொண்டே வந்தார்.

இப்படி அவர் குறைப்பட்டதில் ஒன்றும் தவறில்லை என்பதை அங்கு செய்திருக்கும் சாதனைகளைப் பார்க்கும் போதெல்லாம் நினைக்கத்தான் தோன்றுகிறது."

*யாத்திரை நல்லறிவு தருகிறது! தேசியத்தையும் துளைத்துக் கொண்டு புகுந்துவிடுகிறது நல்லறிவு. 'ஏக இந்தியா' என்ற தத்துவம் எவ்வளவு போலித்தன்மை வாய்ந்தது, என்பதைக் கட்டுரையாளரின் ஏக்கமே இடித்துக் காட்டுகிறது!*

*பாரதத்தில் எந்தப்பகுதியில் திட்டம் இருந்தால் என்ன? எல்லாம் நமது தேசத்தின் ஒரு பகுதிதானே என்று 'மேடை'யில் பேச முடிகிறது, பாலைவனத்தைச்சோலைவனமாக்கும் வேலை வடக்கேயும், சோலைவனமாம் திரு இடம் பாலைவனமாவது கண்டு பதைக்காதிருக்கும் போக்கு இங்கேயும் இருப்பது தெரிந்ததும், எத்தனை காலத்துக்குத்தான் உள்ளதை மறைப்பது, உண்மையைக் கூறிவிடவேண்டியதுதான், ஓரளவுக்கேனும், குறிப்பாகவேனும் என்று ஆவல் பிறக்கிறது. இந்த நல்லறிவு பக்ரா—நங்கல் கால்வாய்ப் பாதையில் 'யாத்திரை' செய்த பிறகாவது உதித்ததே — மகிழ்ச்சி—மிக்க மகிழ்ச்சி என்று கூறத் தோன்றுகிறது.*

*

"வட இந்தியாவில் நான் சென்ற இடங்களில் எல்லாம் ஒரு அதிசயத்தைப் பார்த்தேன். தென் இந்தியாவுக்கும் வட இந்தியாவுக்கும் உள்ள பெரிய வித்தியாசத்தைக் கண்டேன். அங்கு ஏதாவது ஒரு வேலையைத் தொடங்கினால் இரவு பகல் இருபத்துநாலு மணி நேரமும் மூன்று 'ஷிப்டு' முறைகளை வகுத்துக் கொண்டு வேலை செய்து முடித்து விடுகிறார்கள். நம் ஊர்களிலே ஏதாவது பாலம் கட்டப்போவதாக யோசனை செய்வதற்கு ஒரு வருஷம், பிறகு அந்த யோசனையை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு ஒரு வருஷம் ஆகிறது. பிறகு ஒரு மந்திரியைப் பிடித்து அந்தப் பாலத்துக்கு அஸ்திவாரம் போட வேண்டியது. பிரமாதமாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவருவதற்கு ஏற்பாடு செய்யவேண்டியது. அந்தச் செய்தியைப் படித்துவிட்டுத் தமிழ் நாட்டைவிட்டு வெளியில் இருப்பவர்கள் சந்தோஷப்பட வேண்டியது. இரண்டாண்டு கழித்து அவர்கள் திரும்பவும், தமிழ் நாட்டுக்கு வரும்போது 'ஒரு பாலத்துக்கு அஸ்திவார விழா நடந்ததாகப் படித்தேனே! அந்தப் பாலம் எங்கே இருக்கிறது?' என்று ஆவலோடு விசாரிப்பார்கள். "ஓகோ! அப்படி ஒரு விழா நடைபெற்றதா?" என்று நாம் எல்லோரும் வியப்படைந்துபோவோம்.

பிறகு விசாரித்தால் பாலத்துக்கு இட்ட அஸ்திவாரக் கல்லையே காணோம் என்ற விவரம் தெரிய வரும்.

'கல்கி'
(நவம்பர் 20)

*

மேலே உள்ளதும் 'கல்கி'யில் காணக் கிடப்பதுதான்—யாத்திரையின் பலனாகக் கிடைத்த கருத்து, அஸ்திவாரக் கல்லே மறைகிறது பாரதத்தின் ஒரு பகுதியில் — மற்றோர் பகுதியிலோ ஆழ்கடல் வெட்டுகிறார்கள், மலைகளைக் குடைகிறார்கள், கனிகளைத் தோண்டுகிறார்கள், குபேரபுரி காண்கிறார்கள்.

ஆட்சி அனைவருக்கும் என்றுதான் நாமும் பேசுகிறோம்—அதனை அண்டப் புளுகு என்று அறியாமல் சில வேளைகளிலும், அறிந்து, துணிந்து சில வேளைகளிலும், கிடைத்த சுதந்திரத்தின் பலனை அனுபவிப்பவர்கள் நாமல்லவே, நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும் தோட்டிக்குப் புல்லுச்சுமை போகக் காணோம், நமது நாடு வெள்ளையன் காலத்தில் இருந்த இன்னலும் இழிவும், இடர்ப்பாடும் நீக்கப்படாமல் அலங்கோலமாகவே இருந்து

வருகிறது. ஆனால் அங்கே........ என்று துவங்கினால், நேரு பண்டிதரை நயவஞ்சகர் என்று கண்டிக்கும் அளவுக்குத்தான் 'யாத்திரிகர்' செல்வார், நண்பர்களிடம் உரையாடும்போது. பத்திரிகையிலே சில 'பண்பு' வேண்டுமே அதனால் அவர் இந்த அளவில் கூறுகிறார்.

*

"இங்கு செய்திருக்கும் வேலைகளைப் பார்த்தால் பணத்தைப் பணமென்று பாராமல் வாரி இறைத்திருக்கிறார்கள் என்பதை நன்றாகத் தெரிந்துகொள்ள முடிகிறது. சுதந்திரம் பெற்ற இந்தியா இல்லையா? அதிலும் வட இந்தியா ஆயிற்றே! சுதந்திரம் பெற்ற பலனை வட இந்தியர்கள் வெகு நன்றாக அனுபவித்துக்கொண்டிருப்பதை உணர முடிந்தது! அவர்களுக்குப் பணத்துக்குப் பஞ்சமா என்ன?"

*

சுதந்திரம் பெற்ற பலனை வட இந்தியா வெகு நன்றாக அனுபவிக்கிறது!

சுதந்திர ஆட்சியில் இங்கு அஸ்திவாரக் கல்லே காணாமற் போகிறது!

இது ஏதோ தலைவர்களுக்குத் தெரியாமல் நடந்துவிட்ட அநீதி என்று எவரேனும் எண்ணிக் கொள்ளக்கூடாது என்பதற்காகவே 'யாத்திரிகர்' விளக்கம்கூட அளிக்கிறார், நிலைமைக்கு. அதே போது, அங்கே கங்கையும் யமுனையும் பிரம்மபுத்திராவும் வேறு பல பிரம்மாண்டமான ஜீவநதிகளும் உள்ளன — வளம் கிடைக்கிறது, இங்கே ஆறுகள் இல்லையே என்று பேசுவோரின் அறிவுச்சூனியத்தையும் தாக்க முற்படுகிறார். அவர் கூறிடும் கருத்தினைக் கேண்மின்.

*

"சுதந்திரம் பெற்ற பிறகு சர்க்கார் அதிகாரிகளும், பொது ஜனத் தலைவர்களும் வட நாட்டில் ஒவ்வொரு பகுதிகளுக்கும் தாங்களே சென்று, நாட்டு முன்னேற்றத்துக்காகச் செய்துள்ள திட்டங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் தமிழ் நாட்டில் ஒன்றுமே செய்யவில்லை என்றுதான் சொல்லத் தோன்றுகிறது எனக்கு.

தமிழ் நாட்டில் கங்கை நதியைப் போல் ஜீவநதி இல்லாமல் இருக்கலாம், ஆனால் எத்தனையோ பெரிய ஏரிகளும் சிறு சிறு நதிகளும் இருக்கத்தான் செய்கின்றன. சோழ அரசர்கள் காலத்திலேயே அதிசயமான அணைகளும், அற்புதமான ஏரிகளும் வெட்டியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மகா மன்னர்கள் வாழ்ந்த நாடுதான் தமிழ்நாடு. இப்போது அவர்கள் வெட்டிய ஏரிகள் பல கவனிக்கப்படாமல் இருக்கின்றன. அவைகளை எல்லாம் வெட்டி ஆழப்படுத்தித் தண்ணீரைத் தேக்கி விவசாயத்துக்கு உதவும்படியாகச் செய்யலாமே."

இவை யாவும் 'கல்கி'யில்! காட்டுக் கூச்சல் என்போர் உளர் இன்றும், நமது பிரச்சாரத்தை! அவர்களின் கண்கூடத் திறந்துவிடத் தக்க வகையில் யாத்ரீகர் அறிவு கொளுத்த முற்படுவது கண்டு மகிழ்கிறோம்.

காலை அரும்பி மாலை மடியும் அளவுக்குத்தான் இவர் போன்றோரின் இத்தகு கருத்துக்கள் என்று கூறுவர்—இருக்கட்டும் – பூத்ததே அஃதே பெருமைக்குரியதுதான்— ஏனெனில் நாம் செல்லும் பாதையும் மேற்கொண்டுள்ள பணியும் தூய்மையானது என்பதை நமக்கும், நாட்டிலுள்ள நல்லோருக்கும் காட்டும் சம்பவமல்லவா, இந்தக் கட்டுரைகள்?

**"வட நாட்டுத் தலைவர்களைத் தமிழ் நாட்டில் கொண்டாடுவதுபோலத் தமிழ் நாட்டுத் தலைவர்களை வடநாட்டில் அவ்வளவாகக் கொண்டாடுவதில்லை. நான் வட நாட்டில் சுற்றிப்பார்த்த இடங்களில் எல்லாம் நம் தமிழ் நாட்டுத் தலைவர்களின் படங்களையே காணவில்லை. அதைப்பற்றி மனதுக்குள்ளாகவே வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். சிலரிடம் வாய்விட்டும் சொல்லிக்கொண்டும் வந்தேன்."**

கழகத்தில் 'சந்தா' தராமலே, கட்டுரையாளர் உறுப்பினராக முயற்சிக்கிறார் என்று குற்றம் சாட்டத் தோன்றுகிறதல்லவா, இந்தக் கருத்தைக் காணும்போது,

வடநாட்டில், தமிழ்நாட்டுத் தலைவர்களை மதிப்பதில்லை என்ற பேருண்மையும்,

வளமளிக்கும் திட்டம் எல்லாம் வடநாட்டில்தான் என்ற உண்மையும், 'கல்கி' வாயிலாக நாட்டுக்குக் கிடைத்திடப் பயன்பட்டது 'யாத்திரை'—மகிழ்கிறோம்.

சிலரிடம் வாய்விட்டுச் சொல்லிக்கொண்டும் வந்தேன் என்று கட்டுரையாளர் எழுதும்போது உள்ளபடி பரிதாபமாகவும் இருக்கிறது, அவருடைய குருநாதர் கூறிய கருத்தும் நினைவிற்கு வருகிறது.

வேறோர் பிரச்சினை குறித்து ஆச்சாரியார் 'கல்கி'யில் எழுத நேரிட்டபோது யாரோ ஒரு ஆழ்வாருடைய பாசுரத்தை மேற்கோள் காட்டினார்.

கொட்டிவைத்திருக்கும் நெல்லை ஒரு கழுதை மேய்ந்துகொண்டிருந்ததாம். உடையவன் அதை விரட்டி அடிக்காமல், கழுதையின் வாய் அசைவைப்பார்த்து மகிழ்ந்துகொண்டிருந்தானாம்!

அதுபோல நமது காரியம் கெடுகிறபோது நாம் அக்கறை காட்டாதிருப்பது நல்லதல்ல என்பதை விளக்க, ஆழ்வார் கண்ட கழுதையை அழைத்துக் காட்டினார் ஆச்சாரியார். அவருடைய அனுமதி கிடைக்குமென்ற நம்பிக்கையில், நாமும் அந்தக் கழுதைக் கதையைக் கட்டுரையாளருக்குக் காட்ட விரும்புகிறோம்.

வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது! உமக்கும் அது தெரிகிறது! உள்ளமும் வேகிறது.

வடக்கே, தெற்கத்தியாரை மதிப்பதில்லை—அதனையும் உணர்ந்தீர், உள்ளம் நோகிறது! ஆனால், சிலரிடம் வாய்விட்டுச் சொல்லிவிட்டால் போதுமா, நாடறியக் கூற வாரும் என்று அழைக்கிறோம். நானா? என்று அச்சத்துடன் அவர் கேட்கும் காட்சியையும் காண முடிகிறது, ஆச்சாரியார் பக்கத்திலே குறும்புப் புன்னகையுடன் அமர்ந்திருப்பதும் தெரிகிறது!!

★


**பொங்கல் வாழ்த்துகள்**

திராவிட இயக்கத் தலைவர்கள் போட்டோக்களில், பொங்கல் வாழ்த்து, சிறந்த முறையில் தயாராகிறது.

விலை 4 அணா. வியாபாரிகளுக்கு கழிவு 25% மாதிரிக்கு ரூ 2 அனுப்பவும்.

ஜி. சிவானந்தம்
நியூஸ் ஏஜண்ட்
22, பில்டர்பட் ரோட்
வேலூர். என். ஏ.




—பரி—

கற்பூரப் பாத்திகட்டி, கமழ் நீர் பாய்ச்சி, அற்புதமான முறையில் பயிரிட்டு, அனவரதமும் பாடுபட்டாலும், தோட்டம் மாற்றானுடையதாயிருக்கும் வரையில், மருக்கொழுந்தை எடுத்து மனைவிக்குத்தான் சூட்ட இயலுமா. முல்லைமலரைக் கிள்ளி கிள்ளைமொழி பேசும் மகளுக்குத்தான் அணிவித்து மகிழ முடியுமா? கையளவு பூமியேயானாலும், மல்லிகைக்குப்பதில் சிறுகீரையைப் பயிரிடமுடிந்தாலும், தலை வலித்தபோது ஓய்வெடுத்து, உற்சாகமுண்டான போது உழைத்து மகிழ்வதிலுள்ள ஆனந்தத்துக்கு அளவேதும் உண்டோ! கனி ரசமாகத் தரட்டும், காலையிலும் மாலையிலும் பால் சோறாகவே படைக்கட்டும்; சுதந்திரமில்லாத வாழ்வும் தன்னிச்சையில்லா உடலும் பெற்று உயிர் வாழ்வதிலும், ஒரு வேளையில்லா விடினும் இன்னொருவேளை, பால் சோறில்லா விட்டாலும் கால்வயிறு கஞ்சியுண்டு என வாழும் வாழ்க்கைக்கு ஈடு உண்டோ!! — விடுதலை பெறத்துடிக்கும் விவேகிகள் எல்லாம் இதனை எடுத்துக் சொல்லத் தவறுவதில்லை. சூரியனே அஸ்தமிக்காத சாம்ராஜ்யம்! சிவப்பு வர்ணம் குறிக்கப்படாத இடமே கிடையாது, 'அட்லாஸ்' படத்தில்! பிரிட்டிஷ் சிங்கம்! கடல் யாவும் அதனுடையது!—என்றெல்லாம் உலகமே புகழ்ந்தது, பிரிட்டனைப்பற்றி. அப்படிப்பட்டவர்களின் அடிபணிந்து கிடப்பதே பாக்கியம்! அடடா, அதை இழக்கலாமோ?—என்று சொல்லவில்லை, தேசியத் தோழர்கள். விழல், என்று குறிப்பிட்டார் தேசியக் கவி பாரதியார்! வீணர் என்று பாடினார், அனல் கிளம்ப—விழலுக்கு நீரிறைத்து மாயமாட்டோம்! வெறும் வீணருக்குழைத்துடலம் ஓய மாட்டோம்!!—என்று எழுதினார், கனல் தெறிக்க.

பளபளக்கும் முத்தாரம் அணிந்து, ஜொலிக்கும் வாழ்வில் திளைத்துக்கிடப்பதால் சீமானின் காலடியே சதமென நினைப்பது, அறியாதவன் செயல் — அவன் வழங்கும் பிச்சை வாழ்வுக்குப் பல்லிளித்து, கைகட்டி, ராஜகம்பீரர்களாய் உலவினாலும் மக்கள் மன்றம் அவர்களை 'செச்சே!' என்றுதான் மதிப்பிடும். இப்படிப்பட்ட கம்பீரமான புருடர்களைக் கண்டோம், சுதந்திரப் போரின்போது! கவர்னர் இவருக்குச் சிநேகிதம்—'சர்' பட்டம் பெற்றவர்—கனவான்—வைஸ்ராய்க்கு விருந்து வைத்தவர்—என்றெல்லாம் பிறர் கூறிய போது, மக்கள் மன்றம் வெகு எளிதில் தூக்கி எறிந்து பேசிற்று அவர்களை. ஏ! ஜரிகைக்குல்லாய்—அடிவருடி—ஆதிபத்யக் காவலா—என்றெல்லாம், பழிசூட்டியது. இப்போதும் பார்க்கிறோம், படாடோபமான வாழ்வில் திளைத்த பலரை! அவர்களடைந்த பழி இன்னமும் சாகவில்லை! காரணம் அவர்கள் எல்லாம், பிரிட்டனின் ஜெகஜ்ஜோதியிலே மயங்கி, அவர்களை யாராலும் எப்போதும் அசைக்க முடியாதென நம்பி, பல்லிளித்து 'பவிசு' தேடிக்கொள்வதையே வாழ்க்கையின் இலட்சியம் என்று கொண்டிருந்தார்கள்,

அப்படிப்பட்டவர்களை நோக்கி, "ஐயனே! மெய்யனே! அநாவசியமாக விழலுக்கு நீரிறைக்காதீர்—வியர்த்தம் அது. நீரிட்டு வளர்க்கும் மல்லியும் முல்லையும் மலர்ந்ததும், மாடிவீட்டு மனோகரியின் கூந்தலுக்குத்தான் போகும்; ஒருநாளும் அதன் மணமறியார், நம்முடைய அக்கா தங்கைகள். சொந்தக் குழந்தைகளுக்குச் சோறும் பாலும் தந்து வளர்ப்பதற்கும், வெளியார் குழந்தைகளுக்கு அவர்கள் வீட்டு வெள்ளிக் கிண்ணத்திலே பால் சோற்றைக் கலந்து 'பாப்பா! வா' என்று மாதம் பெறும் ரூபாய்க்காக உழைப்பதற்கும் வித்தியாசம் உண்டு. நாலுநாள் படுத்துவிட்டால் நமது குழந்தைதான், 'அம்மா என்ன வேணும்?'' என்று கேட்குமேயொழிய, ஆண்டையின் குழந்தை அருகிலும் வராது. அதுபோலத்தான் அந்நிய அரசுக்கு உழைப்பது. வீணர்கள் அவர்கள்; வியர்வையை ஏன் அவர்களுக்குச் சிந்தவேண்டும்? — என்று கேட்டபோது, வெகுண்டார்கள். விவேகமற்றதுகள்—வேலையில்லாததுகள்—விஷயம் தெரியாததுகள் — வீணுக்குழைப்பதுகள் — சுதந்திரமாவது, சுயராஜ்யமாவது—இதுபோல, எத்தனை எத்தனையோவிதமான ஏச்சும் பேச்சும் பெற்றனர், தேசியத் தோழர்கள். எனினும், வெற்றி கண்டது யார்? 'இதுகள்', 'அதுகள்' என்று எள்ளி நகையாடப்பட்டோரே ஒழிய, மேனாமினுக்கிகள் அல்ல. காரணம், தேசியத் தோழர்கள்கொண்ட கொள்கையும், தாங்கியிருந்த நீதியும் நேர்மையுமேயாகும்

"இந்தியா நமது தாய்நாடு. இதனை அந்நியனொருவன் ஆள்வதா?"

"ஐயபோ! சுருட்டிக்கொண்டு போகிறானே, இங்கிலீஷ்காரன்..."

"வரிமேல் வரிபோட்டு நம்மை வாட்டி வதைத்து, எல்லாவற்றையும் இங்கிலாந்துக்கு கொண்டுபோய் இன்பமாக வாழ்கிறானே?"

என்று எழுப்பிய முழக்கங்களைக் கூச்சல்கள் என்றனர், தடித்த தோலுடையோர். ஆனால், விழித்துக்கொண்ட நாட்டின், குமுறல் என்றனர் சரிதம் அறிந்தோர். இவ்வண்ணம், பிறருக்கு அடிமைப்பட்டுக்கிடக்கும் பூமியில், விடுதலை முழக்கங்கள் கேட்க ஆரம்பித்துவிட்டதென்றால், அந்நிய அரசின் அஸ்தமனம் ஆரம்பமாகிவிட்டதென்று பொருள்! அதனைத் தடுக்க யாராலும், முடியாது—கூடாது.

இந்த உண்மையினை, சரித ஏடு ஏந்திக்கொண்டுவிட்டது — நம்முடைய தலைமுறையில் கண்ணாரக் கண்டுவிட்டோம்—எனினும் அந்த உண்மையை ஏற்க மறுக்கிறார்கள்.

அந்நியர்களல்ல, யார் இதே கொள்கைக்காகப் போராடி, அந்நிய சாம்ராஜ்யத்தை ஒழிக்க அல்லும் பகலும் போராடினார்களோ அதே தேசியத் தலைவர்கள், உரிமை முழக்கங்கள் கிளம்பியிருப்பதன் பொருளை உணர மறுக்கிறார்கள்.

பிரிட்டனிலிருந்த சாதாரணப் பிரஜைகூட இந்திய உபகண்டத்தின் விடுதலை உணர்ச்சியை ஏற்க விரும்பவில்லை, அன்று. எப்படி முடியும் அவனால்? மாபெரும் பரந்த நிலப்பரப்பு தன் வசம் இருக்கிறதெனும் மகிழ்ச்சி இருக்கத்தானே செய்யும்! இதே போல, இன்றைய தினம், வடநாட்டில் வாழும் சாதாரண மனிதனுக்குக்கூட, திராவிட நாட்டுக் கிளர்ச்சியைப்பற்றிக் கேள்விப்படும்போது எரிச்சல் வரத்தான் செய்யும் — ஏனெனில், அவனுடைய நேரு அல்லவா ஆட்சி செலுத்துகிறார் — பம்பாய் சேட், சென்னைக்குச் சென்றால் 'பகுகுஷி'யாகக் காலம் கழிக்க முடியும் என்பதை உணருகிறான். எனவே அவர்கள் எதிர்ப்பதில் ஆச்சரியமில்லை.

ஆனால், விடுதலை விரும்பும் நம்மை எதிர்ப்பவர்கள் இங்கிருப்போர்—தேசியக் கூடாரத்தினர்.

அவர்களிலும் யார், பட்டம் பதவிகளில் ஒட்டிக்கொண்டு, பண்டித நேரு எனக்கு வேண்டியவர், பாரத நாட்டின் புகழ் உலகெங்கும் எப்படி ஜொலிக்கிறது தெரியுமோ, என் மைத்துனன் டில்லியிலே மந்திரி, எனக்கு 'பாரதரத்ன' பட்டம் அளித்திருக்கிறார்கள், என்று கூறத்தக்க அளவில் இருப்பவர்களே, காரசாரமாக எதிர்க்கிறார்கள்.

சாதாரணத் தேசியத் தோழரைச் சந்தித்து கேளுங்கள்,

"ஆமாம்! ஆமாம்! வடக்குவாழ, தெற்குத் தேயத்தான் செய்கிறது ........"

"எல்லாம் வடக்கே, இங்கே, எதுவுமில்லை — என்று நீங்கள் சொல்லுவது, உண்மைதான்"

"நீங்கள் சொல்லுவதைப் பார்த்தால் வடநாட்டாரின் பிடியிலிருந்து தென்னாடு விடுதலை அடைய வேண்டும் என்றுதான் தெரிகிறது"

இவ்வண்ணமே, பதிலளிப்பார். திகைப்பு, முதலிலிருக்கும்—எல்லாவற்றையும் கேட்டதும், ஒத்துக்கொள்ளவே செய்வார்.

ஆனால் தலைவர்களாகவும், சர்க்காரின் பொறுப்பாளர்களாகவும் அமர்ந்திருக்கும் காமராஜர் போன்றோருக்குத்தான், பிரிவினையென்றால் அதிகமாகக் கசக்கிறது. அதற்கு அவர்கள் அளிக்கும் பதில்களைக் கேளுங்கள் — வெள்ளைக்காரரின் 'எடுபிடி'கள் பேசுவது போலவேயிருக்கும். எவ்வளவு பெரியது பாரதநாடு — என்ன புகழ் நேரு பண்டிதருக்கு — நாடு சிறிதானால் இதெல்லாம் வந்துவிட முடியுமா—இதுகளுக்கு விஷயமே தெரியவில்லை — அதுகள் ஏதோ கூச்சல் போடுகின்றன — இதுதான், காமராஜர்கள் சொல்லுவது.

இப்படிப்பட்ட காமராஜர்களுக்குத்தான், அவர் கவன மூட்டுகிறார் "மற்றவர்களுக்கு உழைத்து மடிவதிலுள்ள பலாபலன்களை அறிந்தவன் நான். உங்களைப்போல ஒரு காலத்தில் இன்னொருந்தருக்கு பணியாளைப்போலிருந்து படாத பாடுபட்டவர்களைச் சேர்ந்தவன் நான். ஒரு சமயம் பிரான்ஸ், இன்னொரு சந்தர்ப்பத்தில் பிரிட்டன், வேறோர் நேரம் ஜெர்மனி இவைகளுக்காகச் சுரங்கங்களில் இறங்கி உழைத்துள்ளேன். இப்படி மற்றவர்களுக்காக உழைப்பதில் நமக்கென்ன கிடைக்கும் என்பதை நன்றாக அறிவேன்" என்று தெரிவித்திருக்கிறார்.

பர்மாவிலே சுற்றுப்பயணம் செய்துகொண்டிருக்கும் ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் செயலாளர் குருஷேவ்தான் இவ்வண்ணம் பேசியிருப்பவர்.

பிரான்சின் வாழ்வுக்கும், பிரிட்டனின் சிறப்புக்கும், ஜெர்மனியின் சிறப்புக்கும் பாடுபட்டேன்; இப்போது, என்னுடைய நாட்டுக்காகவும்தான் பாடுபடுகிறேன்—இரண்டில், எது பலன் தரும், இன்பமளிக்கும் என்பதை நன்றாக உணர்ந்து கொண்டேன் என்று தெரிவிக்கிறார், குருஷேவ்.

ஏழையின் மகன், அவர். இடையனாகவும், சுரங்கத் தொழிலாளியாகவும் இளம் வயதில் பாடுபட்டவர். சீமான் வீட்டுச் செல்லப் பிள்ளையாகப் பிறந்து, சீமையிலிருந்துவந்த தாதி, தேனும்பாலும் கலந்தூட்ட, வெள்ளைக்காரப் பேராசிரியன் விதவிதமான பாடங்களைக் கற்றுத்தர, இங்கு படிப்பது அநாகரீகம் — வெள்ளையர் நாட்டினுக்கே சென்று படிக்கவேண்டுமெனப் போய், பிரபுக் குலக் குழந்தைகளுடன் கொஞ்சியுலவி, பிறகு தாயகத்துக்கு வந்து சந்தர்ப்பத்தால் அரசியல் மேடையேறி, தலைவர்கள் தட்டி வளர்க்கும் வாய்ப்பினைப் பெற்று, என்றுமே இன்பமன்றி வேறெதுவும் அறிந்தேனில்லை— எனும் அரசியல் வாழ்வு அறியார் தோழர் குருஷேவ். ஏழை! போதுமே, அந்த இரண்டெழுத்துக்களில் மறைந்து கிடக்கும் இடியும் மின்னலும். சாண் வயிறு கழுவுவதற்காக அவர் பட்டபாடு அதிகம். பூமிக்குள்ளே பொன்னும்—உயிரைத் திரணமென மதித்து, ஆசை மனைவி, அருமைக்குழந்தை ஆகியோரையும் மறந்து, வெடித்தால் சாவு கிடைக்கும்; வெளியேறினால் உயிர் தப்பும் என்பதுணர்ந்தும், கவளச் சோற்றுக்காகக் கஷ்டப்பட்டு—அதைக் கொண்டு மனமோகன மாளிகை எழுப்பும் அந்நியனையும், சுகமான வாழ்வுபெறும் சொந்த நாட்டு முதலாளியையும் அறிவார், குருஷேவ். அந்த அக்கிரமங்களை அறிந்ததால் தான், ஜாரையும், பிரபுக்குல மகிபர்களை

---

## பொங்கல் மலர்

## சந்தாதாரர்கள் கவனத்துக்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூ. 1-8-0 ஆகும். முன்பணமாக ரூ. 1—8—0 அனுப்புகின்ற சந்தாதாரர்களுக்குமட்டும்தான் மலர் அனுப்பப்படும். மலர் தவறிவிடாமல் கிடைக்கவேண்டுமென்று கருதி, ரூ. 1—15—0 அனுப்புகிறவர்களுக்கு, பதிவுத்தபால்மூலம் அனுப்பப்படும்.

பொறுப்பாளர்.

யும் ஒழிக்கும் போராட்டத்தில் அரிவாளும் சுத்தியலும் மிளிரும் செங்கொடியைத் தூக்கிப் பிடித்தார்கள் —வெற்றியும் பெற்றூர்கள்.

அவர் கூறுகிருர், "பிறருக்கு உழைப்பதிலிருக்கும் பலாபலன்களைப் பற்றி எனக்குத் தெரியும், நன்ருக!'' என்று.

அதனையே இங்குள்ள காமராஜர்களுக்குக் கவனமூட்டுகிறோம், பிறருக்கு உழைக்கும் 'ஜரிகைக் குல்லாய்க்காரர்களை' கண்டித்தவர்கள்—எங்கேபோனூர்கள் என்பதை, அறிந்தவர்கள் நீங்கள்.

ஆயினும், 'பிறருக்கு' உழைப்பதே பேறு எனக் கருதி டில்லிக்குச் சாமரம் வீசிக்கொண்டும், டாடாபிர்லா கோயங்காக்களுக்கு தென்னுட்டை பலியிட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள்.

க்ருஷேவுக்கு வரவேற்புக் கொடுத்த இந்த நேரத்திலாவது, அவர் கூறுவது கொஞ்சம் ஏறட்டும், உங்கள் இதயத்தில்! என்னதான் ஆடினுலும் பாடினுலும், வடநாடு வடநாடுதான்—நமக்கு அவர்கள், பிறர்தான். இதனை, மறைத்துப் பிரயோசனமில்லை.

மாற்றூன் வீட்டுத் தோட்டத்துக்குக் காவல்காரனுயிருப்பதைவிட, கையளவு பூமிக்காவது உரிமையுள்ளவனுயிருப்பது எவ்வளவோ மேல். ★

# இட்லி, தோசை, காப்பி!!

படைகள் பாய்ந்து வந்தன கலங்கவில்லை, அந்த அரசன். கலம், கலமாகச் சோற்றை வடித்து மலைபோல் குவித்தான். பாய்ந்து வந்த வீரர்கள், பார்த்தனர்— ஆவி கிளம்பும் முல்லைநிறச் சோற்றைக் கண்டதும், அப்பால் செல்லவில்லை; முதலில், இதை ஒருகை பார்ப்போம்; பிறகு, எதிரியைப் பார்ப்போம்! என்று அமர்ந்து, தின்ன ஆரம்பித்தனர்.

*

பிறகு......... என்னவாயிற்று என்பதை, அறிய கதைக்குப்போக வேண்டாம்—கடந்த வாரம், டில்லி பார்லிமெண்டிலே நிகழ்ந்த ஒரு நிகழ்ச்சியை அறிந்தால் போதும். வேட்டுச் சப்தம்—குண்டு—குருதி வெள்ளம், இதெல்லாம் தேவைப் பட்டிருக்கிறது, அரசுகளைத் தோற்கடிக்க. ஆனுல் நமது அருமந்த, 'பாரதவீரர்'களை இட்லி—தோசை—காப்பி, மிக எளிதில் தோற்கடித்திருக்கிறது!!

மேருமலையென்று போற்றப்படும் நேரு பண்டிதரிடம், பலத்த மெஜாரிடியிருப்பதால் டில்லி பார்லிமெண்டிலே, எது சொன்னுலும் சட்டமாகிவிடும் —இருக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்களிலே இரண்டொருவர் தமக்குத் தெரிந்ததைப் பேசுவார்கள்—ஓட்டுக்கு விடப்படும்—சகல' சர்க்கர் வீரர்'களும் கை தூக்குவார்கள்—சட்டம், உற்பத்தியாகிவிடும். இது, வாடிக்கை.

. நாடு, கேடென்று சொன்னுலும் சரி; நல்லோர் எவ்வளவு கண்டனமாரிகளைக் குவித்தாலும் சரி அதைப்பற்றி அக்கரை கிடையாது; அவர் சொன்னுல் சொன்னதுதான்! அப்பீல், இடையாது!!

'இந்த ஆணவ' முறைக்கு யாராலும் எச்சரிக்கை தர முடியவில்லை. நேரு தான் மேருமலையாயிற்றே! ஆனுல், இட்லி—தோசை—காப்பி, நல்ல பாடம் அளித்து விட்டது!!

சர்க்காரின் சார்பில் அரசியலமைப்பில் திருத்தம் செய்து, ஒரு மசோதா கொண்டு வந்தார்கள். வாக்குவாதம் எல்லாம், வழக்கப்படி நடந்தது. 'ஓட்' எடுக்கும் நேரம் வந்தது. சபைத்தலைவர், மணியடித்தார்— இரண்டு நிமிடங்களுக்கெல்லாம் சபையின் சகல கதவுகளும் முறைப்படி, சாத்தப்பட்டன —ஓட்டெடுப்பு முடிந்தது, எதிர்பாராதவிதமாக, சர்க்கார் தோற்றுவிட்டது! அதிசயமான தோல்வி— எவரும் எதிர்பாராத தோல்வி!! இத் தோல்விக்குக்காரணம் என்னவென்ருல் எல்லாக்காங்கிரஸ்பார்லிமெண்ட் உறுப்பினர்களும் அப்போது இட்லி—தோசை—காப்பி, சாப்பிடச் சென்றிருந்தனர்.

சர்க்காரின் மசோதா தோல்வியடைந்தது—'கல்லுப் பிள்ளையார் மாதிரி' மெஜாரிடி காங்கிரஸ் உறுப்பினர்கள், இருந்தும் தோற்கடித்துவிட்டார்கள். எதிர்க் கட்சியினர்.

நேரு, திகைத்தார்! காரணம் கேட்டார்-எந்தெந்தக் காங்கிரஸ் M. P.க்கள் அப்போது சபையில் இல்லையென்கிற விபரம் வேண்டும்; அதைப்பார்த்து நடவடிக்கையெடுக்க வேண்டும் என்ருர்-ஏடுகள் யாவும் இச் செய்தியைப் பிரசுரித்தன! 'கோட்டை' விட்ட, காங்கிரஸ்காரர்களின் செய்கையைக் கண்டு உலகமே சிரித்தது!! இட்லி-தோசை-காப்பிக்காக, தோல்வியடைந்தது, உலக அதிசயமாயிற்றே!

மறுநாள் — சபையில் காரசாரமான விவாதம்; அதைத் தொடர்ந்து மந்திரி பதிலளிக்க எழுந்தார். ஆனுல், சபையில்; கோரம் இல்லை! இதைக்கவனமூட்டினுர், எச். வி. காமத்! சபாநாயகர் மணியை அடித்தார்-பார்லிமெண்டில் காங்கிரஸ் உறுப்பினர்களை நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பிலுள்ள சத்ய நாராயண் சின்ஹா இருக்கிருரா என்று பார்த்தார். அவர் தான், பார்லிமெண்டின் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாளி, காங்கிரஸ் கட்சிக்கு! அதற்காக நாம் செலுத்தும் வரிப்பணத்தில், சம்பளமும் வாங்குபவர். முதல் நாள், நேரு பண்டிதர் அவரை அழைத்துத்தான், எல்லா விளக்கங்களும் கேட்டிருக்கிருர். அத்தகையவரே, மறுநாள் சபையில், இல்லை! மணி அடித்த பிறகுதான் உள்ளே நுழைந்தார்!!

* * *

உறுப்பினர்கள் பேசும் போது மந்திரிகள் இருப்பதில்லை.

மந்திரிகள் பேசும் போது உறுப்பினர்கள் இருப்பதில்லை.

கோரம்! கோரம்!!-மணியடிக்கும்; சிலர் வருவார்கள்-சபை நடக்கும்.

நான் என்ன வாத்தியாரா? நீங்கள் என்ன சின்னப்பையன்களா?- மிடுக்கோடு கேட்பார் சபையின் துணைத் தலைவர் அனந்த சயனம் அய்யங்கார்.

சபைத்தலைவர் மவ்லங்கரையோ கேட்க வேண்டாம்-முக்கால்வாசி நாட்கள், சபையிலிருக்கமாட்டார்! பத்திரிகைகளைப் படிப்பது தவறு-எனும் அதிசய மனிதர் அவர்!!

ஒரு விசித்திரமான ஏற்பாடு கூடச் செய்துகொண்டிருக்கிருர்கள். அதாவது, நண்பகல் ஒரு மணிக்குமேல் சபை நடக்க நேர்ந்

தால், அப்போது 'கோரம்'கூட அவசியமில்லையென்று! உலகத்தில் எங்கும் காணாத அதிசயம்!— இருந்தும், இந்த 'இலட்சணத்தில்' நடந்துகொண்டிருக்கிறது, 'நம்ம' பார்லிமெண்ட்.

பார்லிமெண்ட் உறுப்பினர்களின் கூட்டத்தைப் பார்த்தாலோ, ஒரு பொதுக் கூட்டத்துக்கு மக்கள் வருவதுபோலிருக்குமாம்! அவ்வளவு பேர்! அகண்ட பாரதமல்லவா? அதனால், அவ்வளவு பிரதிநிதிகள்! அத்தனைபேருக்கும் மாதச் சம்பளம் — முதல் வகுப்பிலே பிரயாணம்—இலவசமாகவே இந்திய உபகண்ட முழுமையும் சுற்றி வரலாம்.

அவர்களோ, சபைக்குச் சரியாக வருவதில்லை — எதிர்க்கட்சியினருக்காவது, 'விரக்தி' ஏற்பட வழியிருக்கிறது—ஆனால், சர்க்காரை நடத்தும் உறுப்பினர்களுக்கு, என்ன குறை? எதுவுமில்லை. என்றாலும், நாடாளும் சபையின் நடவடிக்கைகளிலே, அக்கறை இருப்பதில்லை, அவர்களுக்கு. அதனால், தங்களது சர்க்காரே தோல்வியடையும்படி செய்திருக்கிறார்கள்! அதைக் கண்டு நேரு பண்டிதர் சீறினார்— வராதவர்களின் பட்டியலைக் கேட்டார் — மறுநாள், சபையிலோ, தொடர்ந்து 'கோரம்' இல்லாதது மட்டுமல்ல; பார்லிமெண்டரி காரியதரிசியே வரவில்லை!

“இதென்ன விந்தையாயிருக்கிறதே? இப்படியிருந்தால் எப்படி பார்லிமெண்ட் நடப்பது? பேசாமல் ஒத்திவைப்பதைத் தவிர வேறு வழியில்லை” என்றாராம் அனந்தசயனம், சலிப்புடன்.

காமத், அதற்குப் பதிலளித்தாராம், “உறுப்பினர்கள் எங்கே இருக்கிறார்கள் தெரியுமோ? சபை நடக்கும்போது சென்ட்ரல் ஆலில்' இருக்கிறார்கள்!”

'சென்ட்ரல்ஆலில், என்ன இருக்கிறது?'

“என்ன இருக்கிறதா? அங்குதான் இட்லி-தோசை-காப்பி எல்லாம் விற்கிறது! அதற்காகத்தான் போய்விடுகிறார்கள் எல்லோரும்!”

உண்மையும் அதுதானும்—மசோதாவை 'கோட்டை'விட்ட அன்றும் காங்கிரஸ் உறுப்பினர்கள் அங்குதான் 'வேட்டை'யாடச் சென்றிருந்தனராம். இட்லி—தோசை—காப்பிக் கடையை மூடிவிடலாம். அப்போதாவது, 'சபை' கோரத்துடன் இருக்காதா என்று ஆலோசிக்கிறார்களாம்! இட்லி, தோசை, காப்பி கூட இவர்களுக்கு எதிரியாகியிருக்கிறது!!

★

# புதிய போதகர்

★

[ அரங்கண்ணல் ]

ஏழைகளே! இயலாதவர்களே!!— இனி நமக்குக் கவலையில்லை. 'புதிய போதகர், கிளம்பிவிட்டார்—இனி, புற்றிலிருக்கும் பாம்புகள் சீண்டாது உங்களை—புலிகள், தமது கொடும் சுபாவத்தை மாற்றிக்கொண்டு கொஞ்ச வரும்—ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டு, அழும் உங்கள் கண்ணீர் துடைக்கப்படும் — ஆலையரசர்கள், ஆப்த நண்பர்களாவார்கள் — பணச் சோலை, உங்களுக்குத் திறந்துவிடப்படும்—கவலையில்லை! களிக்கலாம்— இதுநாள்வரை, அவரொருவர் சொல்லாததன் காரணமாகவே, செட்டி நாட்டாரும், வடபாதி மங்கலமும், சுந்தரம் அய்யங்காரும், சோபித வாழ்வில் திளைக்கும் வடநாட்டு முதலைகளும், பேசாதிருந்தனர்! இப்போது, அவரே, எச்சரிக்கை விடுத்துவிட்டார் —இனிக் கவலையென்ன? காயும் கும்பி நிரம்பும்! கழனிகள் உமக்குச் சொந்தமாகும்! கடல்போலுள்ள மாளிகைக் கூடங்களில், நீங்கள் உலவலாம்! ஓட்டைக் குடிசைகளிலும், அதுகூட இல்லாது சாலையோரங்களிலும் சங்கடப்பட்டுக்கொண்டு இருக்க வேண்டியதில்லை, இனிமேல்! ஏனெனில், அவர், எச்சரிக்கை செய்துவிட்டார்.

ஏடுகள், பிரமாதமாகப் போட்டிருக்கின்றன—நாம்கூடத் திகைத்தோம்! அவரா, இப்படி பேசினாரென்று?— ஏனெனில், கோவையிலுள்ள பணக்காரர்கள் யாரார், மதுரையிலுள்ளோர் விலாசம் என்ன, தூத்துக்குடியில் பெரிய மனிதர் எவர், தஞ்சைப் பிரபுக்களின் விலாசம் எது, திருச்சியிலே கோமான் யார், சேலத்திலே வசதியுள்ள சீமான்களின் விபரம் வேண்டும்—என்று, அடுத்து வரும் தேர்தலுக்காக 'முஸ்தீபு'கள் செய்துகொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டோம்—அதற்காக, சமீபத்தில் நடைபெற்ற நகரசபைத் தேர்தல்களில் பணக்காரர்களையெல்லாம் பிடித்துக் காங்கிரசாக்கும்படி 'கக்கன்'கமிட்டிக்கு உத்தரவிடப்பட்டதாம் — **அவர்,** எச்சரிக்கை விடுத்துவிட்டார்!

சீமான்களே உங்கள் கதி என்ன ஆகுமோ? —என்று, கம்பீரத்துடனேயே, விடுத்திருக்கிறார் எச்சரிக்கையை.

ஒருபுறம் தாங்கமுடியாத வறுமையைக் காண்கிறோம். மறுபுறத்திலே! மாடமாளிகைகளில், பணம் படைத்தவர்கள் குஷியாக வாழ்வதையும் காண்கிறோம்—என்று, சமூகத்திலிருக்கும் வேற்றுமைகளை, அலசி அலசிக் காண்பித்திருக்கிறார்! இப்போதுதானா, அவர் கண்ணில் இந்த வேற்றுமைகள் தென்படுகிறது ?— என்று நீங்கள் கேட்பது தெரிகிறது, எனக்கு. கபர்தார்! அப்படியெல்லாம் கேட்கக்கூடாது—ஆத்திரத்தால் உங்களை அழிக்கவும் முடியும்—இயலாவிடில், அன்பு காட்டி, அரவணைத்தும் உங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக சாகடிக்கவும் இயலும் — சதுர்வித உபாயங்களையும் கற்றவர்! சர்க்காரின் முதலமைச்சராக இருப்பவர்—தோழர் காமராஜர்.

சென்னைமாநகர அபிவிருத்தி டிரஸ்டு கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே, எச்சரிக்கை விடுத்திருக்கிறார், “ஒருபுறம் தாங்க முடியாத வறுமையைக் காண்கிறோம். மறுபுறத்திலே மாடமாளிகைகளில், மச்சு வீடுகளில் பணம் படைத்தவர்கள் குஷியாக வாழ்வதையும் காண்கிறோம். சேரிகளில், ஏழைகள் எவ்வளவு கஷ்டப்படுகிறார்கள் என்பது குறித்து அவர்கள் துளியும் கவலைப்படுவதில்லை. ஏழை எளியவரின் அன்பையும் மதிப்பையும் பூர்ணமாக இழந்துவிட்டால், இத்தச் சீமான்களின் கதிதான் என்ன?”

**இந்தச் சீமான்களின் கதிதான் என்ன?**— என்று கேட்கிறார்! ஏழை எளியவரின் அன்பையும் மதிப்பையும் பூர்ணமாக இழந்துவிட்டால், கதிதான் என்ன!—பாசமும் பரி

வும் ஏழை எளியவர்களிடம் ஓடிடக் கேட்கிறார். ஏழை, எளியவர்களின் அன்பும் மதிப்பும் எவ்வளவு அவசியமானது—அதனை இழந்துவிடாதீர், சீமான்களே என்று எச்சரிக்கிறார்.

ஏழெட்டாண்டுகளாகக் காமராஜரின் கண்களில் ஏழை எளியவர்கள் தென்படாமலில்லை — அந்த ஏழை எளியவர்கள் காமராஜ் போன்றோரைப் பார்த்துக் கேட்கிறார்கள்—ஆலையிலே உழைப்போன், கழனியில் உழலுவோன், தோட்டத் தொழிலாளி, வீதியில் அலைவோன், விசாரம் பிடித்துத் திரிவோன் இப்படியிருக்கும் சமுதாயம், தேசியத்தலைவர்களைப் பார்த்துக் கேட்கிறது—"எமது தலைவரே! இப்படிப் பணக்காரர்களைத் தாஜா செய்வதிலேயே பாதி நாட்களைக் கழிக்கிறீர்களே. ஏழை, எளியதுகளின் அன்பையும் மதிப்பையும் இழந்துவிட்டால் உங்கள் கதி என்னாகுமோ?" என்று. இன்று நேற்றல்ல—சுதந்திரம் முகிழ்த்த நாள் முதல் கேட்டு வருகிறது.

இது நாள் வரை அமைச்சர்களை ஆக்கவும் அழிக்கவும், கட்சிக்கு நிதி தேடவும், தேடியதைச் செலவிடவும், தேர்தலுக்கு ஆள்பிடிக்கவும், பிடித்தவர்களை விடாமல் தம் வசம்வைக்கவுமான இத்யாதி வேலைகள், நிரம்ப இருந்தன. இனிமேல், அப்படியிருக்க முடியுமா? நெருங்குகிறதே, பொதுத் தேர்தல்! அதனால், புதிய போதகராக மாறுகிறார்!!

*

ஏழை எளியதுகளின் குரல் ஒலித்தது—காரசாரமாகவே ஒலித்தது—கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்பு—வயல்களிலே, புயல்! தொழிலாளர்களிடம் குமுறல்! எங்கும் வேலை நிறுத்தம்! அதிகக்கூலி வேண்டுமென்னும் முழக்கம்! — அப்போது, காமராஜரும் அவர்தம் கட்சியினரும் 'ஏழை எளியதுகளின் அன்பையும் மதிப்பையும் இழந்துவிட்டால் என்னாகுமோ?' என்று கேட்கவில்லை. ஏனெனில், அப்போது அமெரிக்க மோகினி ஆட்டிப்படைத்தாள். துப்பாக்கி பேசிற்று — சட்டங்கள் கிளம்பின—மடமடவெனச் சாய்க்கப்பட்டார்கள் ஏழைகள் — இரணியன், குப்புசாமி இதுபோல எண்ணற்றோர் கொல்லப்பட்டனர்—கம்யூனிஸ்டா? கட்டிப் பொசுக்கு! சுட்டுத் தள்ளு! என்று கட்டளை பிறப்பிக்கப்பட்டது—5000 பேர் ஐந்து ஆண்டுகளில் சாகடிக்கப் பட்டனர் என்று தகவல் தரப்பட்டது. அப்போது, இந்தப் புதிய போதகர் புன்சிரிப்புடன்தான் உலவினார்! ஏனென்று கேட்டாரில்லை — எதிர்ப்பேதும் சொன்னாரில்லை — உல்லாசமாகப் பவனிவந்தார் — 'வேணும், இதுகளுக்கு' என்றார்-விளைவு, கடந்த தேர்தலில் கடுமையான எதிர்ப்பு! பல இடங்களில் பகிரங்கத் தோல்வி! யாரார் காலிலோ விழுந்து, சர்க்காரை அமைக்க நேர்ந்தது.

## ஏஜண்டுத் தோழர்களுக்கு

**20-12-55-க்குள் தங்களுக்குத் தேவையான பொங்கல் மலருக்குரிய முழுத் தொகையையும் அனுப்பும் ஏஜண்டுகளுக்குமட்டும்தான் மலர் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.**

பொறுப்பாளர்.

இப்போது அடுத்த தேர்தல் நெருங்குகிறது — ஏழை எளியதுகள் என்ன பாடுபடுத்தும் என்கிற பயமும் தெரிகிறது—அவர்களை விரோதித்துக் கொண்டால் 'ஜம்பம்' சாயாது என்பது காமராஜருக்குமட்டுமல்ல நேரு பண்டிதருக்கும் விளங்கிவிட்டது-அதனாலேயே 'மாடல் சோஷியலிசம்' என்கிறார்கள்—இப்போது ரஷ்யக் கம்யூனிஸ்டுத் தலைவர்களை அழைத்துவந்து மக்களுக்குக் காட்டினார்கள்—மார்தட்டியும் பேசுகிறார், காமராஜர், ஏழை எளியதுகளின் அன்பையும் மரியாதையையும் இழந்துவிட்டால் இந்தச் சீமான்களின் கதிதான் என்ன என்று!

புறப்படும் இந்தப் புதிய போதகர்களை நம்பித்தானே, ஏழை எளியதுகள் அரசாங்கத்தை ஒப்படைத்தார்கள், எட்டாண்டுகளுக்கு முன்பு. இவர்கள் செய்ததென்ன? டில்லி அரசின் ஊழல்களைத்தான், ஒவ்வொரு நாளும் கேள்விப்பட்டவண்ணமிருக்கிறோம். உங்களுக்கென்ன நாங்கள் மட்டமோ?—என்கிறது சென்னை சர்க்காரும்.

ஊசி வாங்க 'ஆர்டர்' கொடுத்தார்கள்! 'ரேடியம்' ஊசி!! புற்றுநோய்க்கு ஆளாகித் துடிக்கும் தாய்மார்களுக்கு, மிக மிக அவசியமானது, இது. 1947ல் சென்னை சர்க்கார், அமெரிக்க கம்பெனி ஒன்றிடம் 315 ஊசிகளுக்கு 'ஆர்டர்' கொடுத்தார்கள். மொத்த விலை ரூபாய் 67,323!

ஊசி வந்து இறங்கிற்று—ஊசி எப்படி, நல்லதா கெட்டதா என்று பார்க்கும் பக்குவமும் இல்லை — உடனே பணத்தையும் அனுப்பிவிட்டார்கள். பிரித்துப் பார்த்தால், 315ல் 279 ஊசிகள் பிரயோசனமில்லாதவை என்று தெரியவந்ததாம்!

1947ல் இது தெரியவந்தது-என்ன செய்வதென்று யோசித்தார்கள். ஒரு நாள் இரண்டு நாளல்ல - சாதாரணமாக நீங்களும் நானுமென்றால் சீக்கிரம் முடிவுசெய்துவிட முடியும். சர்க்காரல்லவா! நான்காண்டுகள் பிடித்தது, அந்த ஊசிகளை என்ன செய்வதென்று முடிவுசெய்ய!!

கொஞ்சம் கொஞ்சமாக திருப்பி அனுப்பிவிட்டு நல்ல ஊசிகளைக் கேட்பதென்று முடிவுசெய்து, 1951 மார்ச் 17ல் 63 ஊசிகளை அமெரிக்காவுக்கு அனுப்பினார்கள்! மேலும் ஆண்டு நான்கு ஓடிவிட்டது — அமெரிக்காக் கம்பெனி இன்னும் அதுபற்றி எந்தவித பதிலும் தெரிவிக்கவில்லை. 1955—இப்போது என்ன செய்வதென்று விழிக்கிறார்கள்.

எட்டாண்டுகள்! ரூபாய் அறுபத்தேழாயிரம்! யாராரோ, முதல் மந்திரியாக வந்து போய்விட்டார்கள்—என்றாலும், வியாதிக்குப் பயன்படாத வெறும் ஊசி—ஏமாற்றினான் எத்தன். இன்னும், விழிக்கிறார்கள்.

கல்வி அமைச்சர் சுப்ரமணியம் போட்ட உத்தரவால், கல்வி இலாகாவில் பல இலட்ச ரூபாய் விரயமான சேதியும், அதனை அவரே ஒத்துக்கொண்டதையும்தான் முன்பே அறிவீர்கள், நீங்கள்.

இப்படி விரயமாகும் பணம் யார் வீட்டுப் பணம்? வடநாட்டுக் கம்பெனிக்கு 10 இலட்சம் உதவி -நெல்லையிலே ஆலை கட்ட! இமயமலை ஏறுவோருக்குப் பயிற்சியளிக்க எங்கேயோ இருக்கும் டார்ஜீலிங் பள்ளிக்கூடத்துக்குப் பண உதவி! டில்லியில் வசிக்கும் தென்னாட்டுக் குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் கட்ட இங்கேயிருந்து பல இலட்ச ரூபாய்கள் அனுப்பியிருக்கிறார், காமராஜர்! ஏனென்றால். டில்லியில் சர்க்கார் எதுவும் இல்லை பாருங்கள்-டில்லியைவிட மிகவும் செழிப்பானதல்லவா சென்னை, பொருளாதாரத்தில்! அதனால், டில்லிக்கும் பணதானம் செய்திருக்கிறார்கள்!!

இதெல்லாம் நியாயமா? — என்று ஏழை எளியதுகள் கேட்பார்களல்லவா, வருகிற பொதுத் தேர்தலில்! அதற்கு, இப்போதே 'முஸ்தீபு'செய்து கொள்ளுகிறார், அன்பர் காமராஜர்.

அடடா! என்ன அன்பு — எவ்வளவு பாசத்துடன் எச்சரிக்கிறார், "ஏழை எளியதுகளின் அன்பையும் மதிப்பையும் இழந்துவிட்டால், சீமான்களே! உங்களது கதிதான் என்ன?" என்று.

*

வெள்ளை ஏகாதிபத்தியத்தை விரட்டிவிட்டு, ஆனந்தமாக அரியாசனத்திலேறிய இந்த அன்பர்கள், மண் குடிசைகளையும் மாடிவீடுகளாக ஆக்குவதுதானே? எங்கெங்கு பணம் குவிந்து கிடந்ததோ, அவைகளையெல்லாம் சட்டம்போட்டு வாங்கி, சாதாரணதுகளின் இன்பவாழ்வுக்கு திட்டங்கள் பல தீட்டுவதை யார் வேண்டாமென்று தடுத்தார்கள்? போதனை புரிகிறார்கள், போதனை! வேதனை தீர்க்க வேண்டியவர்கள்—பணக்காரர்களுக்கு வெண்சாமரம் வீசுவதே இன்பம் என்று இத்தனை நாளும் இருந்துவிட்டு, இப்போது ஏழை எளியதுகளுக்காகப் பரிந்து பேச வருகிறார்கள்.

ஒரு வாரத்துக்கு முன்புதான் சென்னை 'பி. அண்ட் சி.' மில்லிலே வேலை பார்க்கும் 45000 தொழிலாளர்கள் ஒருநாள் வேலைநிறுத்தம் செய்தார்கள்—தங்களது குறைகளைத் தீர்க்க சரியான மத்தியஸ்தர் ஒருவரை நியமனம் செய்யும்படி, சர்க்காரைக் கோரி. என்ன சொன்னார் தெரியுமா, காமராஜர்? ஏழை எளியதுகளின் பக்கமாபேசினார்! அல்ல,அல்ல—உருட்டும் வழி, மிரட்டும் குரலில் "இப்படியெல்லாம் சர்க்காருக்கு உத்தரவிடும் போக்கில் தொழிலாளர்கள் நடந்து கொண்டால், அதற்காக சர்க்கார் ஒன்றும் பணிந்துவிடாது" எனும் பொருளில் தெரிவித்தார்!

அதே வாய்தான், இப்போது "அடடா! மாடி வீடுகள் ஒருபக்கம். மண்குடிசை ஒரு பக்கம். ஏழை எளியதுகள் எப்படிக் கஷ்டப்படுகிறார்கள் தெரியுமா? நெஞ்சு பொறுக்கவில்லையே," என உருகுவதுபோலப் பேசியிருக்கிறது.

இது உருக்கமா! அல்லது சீமான்களுடன் பேசும் 'பேரமா'!—என்று இதோ ஒருவர், கேட்கிறார்.

அவர் இந்தப்பிரச்னைபற்றிவிவாதிக்கவில்லை—வேறோர் பிரச்னைக்காக காமராஜர் யார் என்பதைப் படம்பிடித்துக் காட்டுகிறார். நம்மைவிட, காமராஜரை நன்றாக அறிந்தவர் அவர்—காமராஜர் உயர, பாதையமைத்த 'பக்த' குழாத்தில் ஒருவர்.

"மாதத்தில் முப்பது நாள் என்றால், 27 நாள் சுற்றுப்பிரயாணம் செய்து 3 நாள் சென்னையிலிருக்கும் காமராஜர் 3 தினங்களில் 300 தடவையாவது கோயங்கா வீட்டுக்கு ஓடுகிறாரே!"

கோயங்கா, யார்? ஏழை எளியவர்களில் ஒருத்தரா! அல்ல, அல்ல, பெரிய முதலாளி—வடநாட்டுத் திமிங்கிலம். அவர் வீட்டுக்கு ஓடுகிறாராம், காமராஜர். அவரிடம் மட்டுந்தான் என்றெண்ணாதீர்கள்.

"டி. வி. எஸ். கம்பெனியாரிடம் காவடிகள் தூக்குவதேன்? வோட்டு சேகரிக்க உங்கள் காரைக் கொடுங்கள் என்று கெஞ்சுவதேன்? மற்றும் இன்னும் பல காரியங்களை வேண்டுவதேன்?"

காவடி தூக்குகிறாராம்! வோட்டு கேட்க உதவி கேட்கிறாராம்! இன்னும் என்னென்னவோ, பெறுகிறாராம்!—அந்த 'விபரம்' யாதோ? அறிவிக்கவில்லை நண்பர். ஆனாலும்சிலதெரிவிக்கிறார், இந்த விபரங்களை "பேரிகை" இதழ் மூலம். 'பேரிகை' யாருடைய புகழைக் கொட்டி முழக்கிய ஏடு என்பது, தெரியும் எல்லோருக்கும்! அது கூறுகிறது, கோயங்காவையும் டி. வி. எஸ். கம்பெனிக்காரர்களையும் தேடி ஓடுகிறாராம், காமராஜ், கோயங்கா பத்திரிகைத் துறையில் ஒரு திமிங்கிலம்! டி. வி. எஸ். பெரிய முதலாளித்துவ பீடம்! அங்கே ஓடுகிறாராம், அவர்—கூறுகிறது 'பேரிகை' அதுவும் ஓட்டுக்கு ஆள்பிடிக்க ஓடுகிறாராம்! அத்தகையவர், 'ஏழை எளியவர்களின் அன்பையும் மரியாதையையும் இழந்துவிட்டால் இந்தச் சீமான்கள் கதி என்னாவது?' என்று வருத்தப்பட்டிருக்கிறார்.

அப்படி அவர் வருத்தப்பட்டு எச்சரிக்கையெல்லாம் விடுத்து முடித்தபின் செட்டிநாட்டு ராஜா முத்தையா செட்டியார் எழுந்து வந்தனோபசாரம் செய்தாராம். அவர், காமராஜரின் எச்சரிக்கை குறித்து என்ன சொன்னார் என்று ஏடுகள் போடவில்லை. அங்கு சொன்னாலும் சொல்லாவிட்டாலும், மனதுக்குள் சிரித்துக்கொண்டுதானிருப்பார் "முன்பு எங்களிடம் 'கவுரவப் பிச்சை' கேட்டீர்கள். இப்போது 'பூச்சாண்டி காட்டிப் பிச்சை'க் கேட்கிறீர்கள். அவ்வளவுதானே!" என்று.

ஏனெனில், தேர்தல் நெருங்க நெருங்க, பணக்காரர்களை அழைத்து காங்கிரஸ் வட்டாரத்தைப் பலப்படுத்து என்று ஒருபுறம் சொல்லிவிட்டு — இன்னொருபக்கம், "பணக்காரர்களே! ஏழைகளின் மதிப்பை இழந்தால், என்ன ஆகும் உங்கள் கதி?" என்று எச்சரித்தால், என்ன பொருள். பத்துகொடுத்ததுபோதாது, ஜெயிக்க—பதினைந்துவேண்டும்! ஆயிரம் அளித்தால் ஆகாது காரியம் — இரண்டாயிரம் வேண்டும் என்பது தானே, போதனையின் பொருள்?

★


# திராவிட நாடு பொங்கல் மலர்

★

பொங்கற் புதுநாளுக்குப் பொருத்தமான விருந்து

★

அண்ணாத்துரை

அளிக்கும்

அரிய கருத்தோவியங்களுடன்

★

மூன்று கலர் ஆர்ட் அட்டை

120 பக்கங்கள்

விலை ரூ. 1-8-0

2-ம் பக்கத் தொடர்ச்சி

காற்று வீசியபடி! இந்த நிலையில் வீசி எறியப்பட்டவர்கள், மூழ்கி மூச்சுத் திணறிப் போனவர்கள், மோதி நசுக்குண்டவர்கள், அம்மவோ! எண்ணும்போதே, செவிகளில் பேய்க் காற்றின் கூச்சலையும் மீறிக்கொண்டு கிளம்பும், கதறல் கேட்கிறது. அந்தோ! என்ன எண்ணினரோ, எதை எதை எண்ணிக் கொண்டனரோ, விபரீதம் விளைவித்த அந்த விநாடியின் போது. குழந்தைகள், மந்தி கரம் பட்ட மலராகி விட்டன! சிறுமதி படைத்தோரிடம் சிக்கிய செல்வம் போல, தமிழகத்தின் உண்மைச் செல்வங்களாம் நம் சிறார்கள், சின்னாபின்னமாகி விட்டனர். பெரியவர்களோ! பேய்க் காற்றினால் முறிந்து போயினர். தஞ்சையும் இராமநாதபுரமும், இந்த அழிவுக்கு இலக்காகி, நொந்துகிடக்கின்றன. நமது நெஞ்சம் வெடித்திடும் நிலையில் இருக்கிறது. இதை எங்ஙனம் தாங்கிக்கொள்ள முடியும்!

எரிமலை, நெருப்புக் குழம்பினைக் கக்கும் — பொறி நூறு மைல்களுக்கு அப்பாலும் தெறிக்கும்— தீயிலே நகரங்கள் கருகும், சூழ இருந்த சுந்திரபுரிகள் யாவும் சுடுகாடுகளாகும்!— என்று இன்னுமோர் திங்களுக்குப் பிறகு, எவரேனும், வெசுவசுயஸ் எரிமலை குறித்தோ, ஜப்பான் நிலை பற்றியோ கூறினால் — ஆமாம்! அந்த அழிவு பயங்கரமானதுதான் அத்தகைய ஆபத்திலே சிக்கிக் கொள்வதென்றால், கொடுமைதான் என்று கூறிட முடியும் — மக்கள் சமுதாயம் இதுபோன்ற அழிவுகளை ஓரோர் சமயம் சமாளித்துத் தான் தீரவேண்டி இருக்கிறது, என்ன செய்வது, கடற் கொந்தளிப்புக்கும், கடும்புயலுக்கும், நில நடுக்கத்துக்கும், எரிமலைக்கும், ஆபத்து கக்கிடும் எண்ணற்ற பல நிலைமைகளுக்கும் இடையிலேயேதான் மனித சமுதாயம் நிற்க வேண்டி இருக்கிறது, என்று பேசிடக்கூட இயலும். ஆனால் இன்று? மனம் வேலை செய்ய மறுக்கிறது! ஏடுகள் பலவற்றிலே நாடுகள் சிலவற்றிலே நேரிட்ட அழிவுகள் பற்றிப் படித்த நினைவுகூட நசித்துப் போகிறது— நெஞ்சம் வேதனை ஒன்றைத் தவிர வேறெதனையும் ஏற்றுக்கொள்ள மறுக்கிறது.

மூன்றாண்டுகளுக்கு முன்னர் வீசியது புயலல்ல — சிறிதளவு வேகமாக வீசிய தென்றல் என்று கூறத் தோன்றுகிறது, இதுபோது நேரிட்டிருக்கும் 'அவதி'யைக் காணும்போது. தென்னையும் வாழையும் அழிந்தது அதிகம் அப்போது — உயிர்ச் சேதம் அதிகமல்ல; இப்போது உயிர்ச் சேதம், கேட்போர் உள்ளத்தை உடைத்திடும் அளவில். கிராமம் கிராமமாக அழிந்துகிடக்கின்றன! பிணமலை! கால்நடைகள் அழுகிக் கிடக்கின்றன. புதைக்கு முன்பு, இன்னின்னார் என்று அடையாளம் கண்டறியக்கூட முடியாத நிலையில், உடலங்களாகி விட்டனவாம். காலமெல்லாம் உழைத்து உழைத்து, ஊரை வாழ வைத்து வந்த உத்தமர்களே, மிக அதிகமான அளவில் நாசத்துக்குப் பலியாகி இருக்கிறார்கள். அவர்கள்தானே, பாபம், கடலோரத்தில் குடில்கள் அமைத்துக்கொண்டு வதிகிறார்கள்—செல்வம் படைத்தோர், கடலிடம், உள்ளத்துக்கு உற்சாக மூட்டும் காற்றினையும், முத்துக்களையும் மட்டும் பெற்றுக்கொண்டு, பாதுகாப்பு அரண் அமைத்துக்கொண்டு வாழ முடிகிறது—இந்த ஏழைகள் கடலிடமிருந்து பெறுவது அலைகளைத் தானே! இதுபோது, அவதியே அலை அலையாக வந்துள்ளது. கடல், சாவினையே அலையாக்கி அவர்மீது ஏவி இருக்கிறது. காற்று சிறிதளவு பலமாக வீசினாலே போதும், குடில்கள் கூளமாகிவிடும்! மழையின் அளவு சிறிது அதிகமானாலே போதும், குடில்கள் மிதந்து கிடக்கும் நிலை ஏற்பட்டு விடும். இப்போது, நாட்டு வளத்தை அழித்திடவே, கடற் படையும், காற்றுப் படையும், மழைப் படையும் தாக்கினவே, என் செய்வர், எளியோர்— பிணமாயினர் — அழுகிக்கிடக்கின்றன உடலங்கள்.

சேரிகள்—பரதவர் குடில்கள்— பாட்டாளிகளின் குடிசைகள்—உழவர் உழன்று கிடக்கும் குச்சுகள்— இவை யாவும் நாசமாகிவிட்டன— அந்த உத்தமர்களிலே நூற்றுக் கணக்கானவர்கள் மாண்டுபோயினர்—மீதமிருப்போருக்கு வீடில்லை, வயலில்லை, உயிர் இருக்கிறது, உள்ளத்தில் திகைப்பன்றி வேறெதுவுமில்லை—ஆனால் தம்பி! நமது முதலமைச்சர், காமராஜர், அவர்கள் மத்தியில் இருக்கிறார்! பொறுப்புணர்ந்த ஆட்சி முதல்வர், இருக்க வேண்டிய இடம்! ஆம்! அங்கு பெரிய அதிகாரிகள் புடைசூழ இருக்கிறார், பெருநாசத்துக்கு ஆளான மக்களின் கண்ணீரைத் துடைத்திடும் காரியத்தில் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார், என்பதை எண்ணும்போது, கொந்தளித்தெழுந்த கொடுங் கடலே! குடும்பங்களை அழித்த பேய்க் காற்றே! மக்களை அழிவிலே மூழ்கடித்த பெரு மழையே! அழிவினை, இரக்கமின்றி எம்மீது ஏவினீர்—கர்வம் கொள்ளற்க — பிணமலை கண்டு பெருவெற்றி கொண்டுவிட்டோம் என்றெண்ணிப் பேயுள்ளம் கொள்ளற்க—அழிவு ஏவினீர்—இதோ எமக்கு ஆறுதல் அளிக்க, எமது முதலமைச்சர் வந்துள்ளார்! எமது கண்ணீரைக் காணுகிறார், தமது கண்ணீரைச் சிந்துகிறார், அழிவு சூழ் இடங்களில் ஆறுதலை அள்ளித் தருகிறார்! கோட்டையில் அமர்ந்துகொண்டு, 'உத்தரவுகள்' போடும் முதலமைச்சர் அல்ல இவர்! ஆண்டவன் கோபத்தாலே நேரிட்ட சோதனை என்று பேசிடும் பூஜாரி அல்ல! நமது ஆட்சியின் போது இந்த அழிவு வந்துற்றதே, என்று உளம் பதைத்து, பறந்து வந்தார், எமக்கு வாழ்வளிக்க— என்று மக்கள் எண்ணி வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள்; தம்பி! சொல்லத்தானே வேண்டும். முதலமைச்சர் காமராஜரின் பொறுப்புணர்ச்சி கண்டு நாம் பெருமைப் படுகிறோம். அளவு குறைவு— முறை குறையுடையது — என்று நிபுணர்கள் பேசக்கூடும் நாலாறு மாதங்களுக்குப் பிறகு, ஆனால் முதலமைச்சரின் இதயம் தூய்மையானது, ஏழை எளியோர்பால் அவர் இதுசமயம் காட்டிய அக்கறை தூய்மையானது என்பதை எவரும், எந்நாளும் மறந்திட மாட்டார்கள்—இயலாது.

வளம் கொஞ்சும் தஞ்சை, வாளை துள்ளும் வாவிகளும், கெண்டை புரளும் ஆறுகளும், கமலம் முகம் காட்டும் கழனிகளும், என்றெல்லாம் நாவலரும் பாவலரும் பன்னெடுங்காலமாகவே பாட்டு மொழியால் பாராட்டியுள்ளனர். அங்கு இப்போது பிணமலை.

பேயா மழை பெயுது, பெரிய வெள்ளம் வருகுது! ஆனால் எல்லாம் வேற்றுச் சீமைகளில். எங்கள் தரணிக்கும் மழைக்கும் நீண்ட காலமாகவே பகைநெளிகிறது என்று அவலச் சுவைபடக் கூறுவர்,

இராமநாதபுரம் மாவட்டம் குறித்து, அங்கு இப்போது, வெள்ளக்காடு! காமராஜர் காண்கிருர், கண்ணீர் உகுத்திடாமலிருக்க முடியுமா. உபநிஷதம் படித்து உள்ளத்தைப் பாறையாக்கிக்கொண்டவர்கள் தவிர, மற்ற எவரும் மனம் உருகிடத்தான் செய்வர்—நிலைமைகண்டு.

நமது அண்ணன் தம்பிகளின் குடும்பங்கள் ஆலாய்ப் பறக்கின்றன—அழுகுரல்! பிணங்களைத் தேடித்தேடி எடுக்கிருர்களாம்! உருவமே தெரியாதபடி அழுகிப்போய்விட்டனவாம்! நிதசரி வரும் செய்திகளைக் கேட்கத் திகைக்கிருேம். தாயை இழந்த தனயர்கள், பிள்ளைகளைப் பறிகொடுத்த பெற்றேர் ஜோடி ஜோடியாகப் பலர், தூங்கியோர் தூங்கிய நிலையில், ஒதுங்கி ஒண்டினேர் கூண்டோடு, குழந்தைகள், வாலிபர்கள், வயோதிகர்கள்—இவ்விதம், நூறு நூறுகச் செத்துக் கிடக்கிருர்களாம், — தென்னஞ் சோலைக்குள்ளும், இடிந்து விழுந்த வீடுகளுக்கடியிலும். செய்திகளை அறிய, அறிய திகைக்கிருேம்—செய்வதென்னவென்றறியாது விழிக்கிருேம்-தென்னகம் இதுவரை இப்படியொரு கோரத்தைச் சந்தித்ததில்லை. கடல் நீர், ஊருக்குள்ளே! பச்சைப் பசேலெனக் காட்சி தரும் நன்செய் எல்லாம் வெள்ளக்காடு! வள்ளல் தருக்களாம் தென்னந் தோப்பைக் கொண்டு வயிறு கழுவும் பட்டுக்கோட்டை முத்துப்பேட்டை வாசிகள் பரிதவிக்கிருர்கள்! உப்பளம் வேதாரண்யம் — ஒரு செய்தியையும் அங்கிருந்து தெளிவாகப் பெற முடியாத நிலை. மதுரை, திருச்சி, இராமநாதபுரம் — ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும், நெஞ்சு வெடிக்கத்தக்க நிகழ்ச்சிகளைப்போய் பார்த்த மதுரை மாவட்டச் செயலாளர் முத்துவும், திருச்சி மாவட்டச் செயலாளர் தர்மலிங்கமும் எழுதுகிருர்கள். இளங்கோ, தஞ்சை மாவட்டச்செயலாளர், என்ன நிலையிலிருக்கிருர் என்றறிய தபால் போக்குவரத்தே இல்லை. மூன்றுண்டுகளுக்குமுன்பு இயற்கையின் நாச நர்த்தனத்துக்கு ஆளாகி அவதிப்பட்டனர்—மக்கள். அதே மக்களுக்கு அதைவிடப் பெரிய பேரிடி! கட்டுமரம் கட்டிச் சென்று, கடலை அளந்து, மீன் பிடிக்கும் தொழிலாளர்கள் எத்தனைபேர் எங்கே போனுர்கள் என்றும் திகைப்பாயிருக்கிறதாம்! அவர்தம் கலங்கள் உடைந்து, ஊருக்குள் வந்துகிடக்கும் படங்களைப் பார்க்கும்போது, வயிறு எரிகிறது! வளைந்துகிடக்கும் மின்சாரக் கம்பங்கள்—தூள் தூளாகிப் போன நெல் ஆலைகள் — பள்ளிக்கூடங்கள் —ஏழை ஆதித்திராவிடச் சேரிகள்—ஐயோ, நாசம்! நாசம்! படுநாசம்!!

துயர்துடைக்கஓடிய முதலமைச்சரையும், அதிகாரிகளையும், பொதுமக்கள் தொண்டர்களையும் பாராட்டுகிறேம், தத்தமது கடமையைச் சரியான சமயத்தில், தவருமல் செய்தார்களே எனும் மகிழ்ச்சியால். இந்த உதவிகளும் இல்லாது போனுல், என்னுகியிருப்பரோ நம்மவர்கள் என்றெண்ணும் போது, பெருமூச்சுவிடுகிறேம். அந்தக் கோரத்தை எண்ணவேமுடியவில்லை.

ஏற்பட்டிருக்கிற நாசம் சாதாரணமானதல்ல—எங்கோ ஓரிடத்தில் தோழர் காமராஜரைக் கேட்டதற்கு, ''இறந்துபோனவர்களைப்பற்றி, எதுவும் செய்யமுடியாது சர்க்காரால். உயிரோடிருப்பவர்களுக்கு என்னென்ன செய்யவேண்டுமோ அத்தனையையும் செய்து தரும்'' என்று சொன்னுராம், உண்மைதான்! இயற்கையின் பல்லுக்கு இரையான நமது மக்களின் வாழ்வை, இனி எப்படிப் பெறமுடியும் எம்மால்? அவர்களுக்காக, வழிந்தோடும் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு, அவதியுறுவோரின் அச்சத்தையும் துக்கத்தையும் ஆற்ற நம்மாலான முயற்சிகளை எடுக்கவேண்டும்! ஏற்பட்டிருக்கிற நஷ்டத்தை எண்ணிடிலோ, உதவி, பெயரளவில் இருந்தால் போதாது—ஒருவர் இருவர் வழங்கிவிட்டாலும் போதாது—சர்க்கார் பெருத்த அளவில், பலகோடி ரூபாய்களை, ஒதுக்க நேரும் என்றே கருதுகிறேம். இடிந்துபோன கட்டிடங்கள், அதோ நிற்கின்றன. அதற்கருகில், அழுதவாறு கிடக்கிருர்கள், வீட்டின் சொந்தக்காரர்கள். விவசாயி, அழுகிருர்—இடுப்பொடியப் பாடுபட்டேன்—கதிர் முளைத்த காலையில், என் கழனி வெள்ளக் காடாகிவிட்டதே ஐயா, எப்படி காலந்தள்ளப்போகிறேன் — 'கிஸ்தி' எப்படிக் கட்டப்போகிறேன் என்று—தென்னஞ்சோலையையும், வாழைத் தோட்டங்களையும் நம்பி வாழ்ந்தோர் அதோ மடமடவெனச் சாய்ந்துவிட்டதே எமது வாழ்க்கை. ஐயகோ, என்று நிற்கிருர்கள். இவர்களை வருக்கும், உதவியளிப்பது என்ருல், சாதாரணமான காரியமல்ல. பல குடும்பங்களிலே புதிதாக விளக்கு ஏற்றிவைக்கவேண்டிய பொறுப்பு அரசுக்கு ஏற்பட்டுவிட்டது, அவ்வளவு பெரிய நாசம்.

மூன்றுண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட அவதிகண்டு உளம்பதைத்த நாம், நமக்கு நாட்டிலே உள்ள வாய்ப்புக்கு ஏற்ற முறையில் ஓரளவுபணியாற்றி ஏறத்தாழ முப்பதாயிரம் திரட்டி ஏழை எளியவர்களுக்கு ஆடைகள் வாங்கி, சர்க்கார் மூலமாகவே அனுப்பிவைத்தோம். இது போது நேரிட்டுள்ள நாசத்தின் அளவைப் பார்க்கும்போது, அவதியுறும் மக்களுக்கு வாழ்வளித்திடவும், அழிவு தந்த புண்களை ஆற்றிடவும், விபத்தால் ஏற்பட்டுள்ள வடுக்களைப் போக்கிடவும், பலமும் மக்கள்பால் பரிவும்கொண்ட சர்க்காரன்றி, வேறு எந்த தனிப்பட்ட அமைப்பினுலும் இயலாது என்று திகைக்கவேண்டி இருக்கிறது. கலத்தைச் சுக்கு நூறுக்கத்தக்க சூறையும் சுழலும் வீசும்போது, கலத்தைக் காத்திடக் கட்டுமரம் ஏறிச்சென்று என் செய்வது? பெருந் தீ பற்றிக் கொண்ட நிலையில் பிடிமண் தூவியா அணைத்திட முடியும்? நிச்சயமாகப் பல கோடி ரூபாய்களைச் செலவிட்டாக வேண்டும்—உடனடி உதவி அளிக்கும் திட்டங்கள் அளிப்போரின் உள்ளங்களுக்கு மகிழ்வளிக்கும், அவதிக்காளானேருக்கு வாழ்வளிக்கவோ, நீண்டகால திட்டங்கள் தேவை. பணம் சர்க்காரின் பெட்டியிலிருந்து செலவிட வேண்டும், என்று கூறிவிட்டு பொறுப்பைத் தட்டிக் கழித்துவிடப் பேசுவதல்ல இது — சர்க்காருக்கு நாட்டில் உள்ள எல்லாப்பெட்டிகளும்சொந்தம்—முறைப்படியும் உறவுகொண்டும், அவைதமை திறந்து, பணத்தை அள்ளி எடுத்துச் சர்க்கார் செலவிட முன்வரவேண்டும்.

''அடே! அடே! என்ன அக்ரமம் செய்கிருய்?'' என்ருன் குறும்பன், நண்பன் திடுக்கிட்டுப்போனுன், காரணம் அவன் ஒரு அக்ரமமும் செய்யவில்லை, அங்கமெலாம் தொழு நோயால் தாக்குண்டு கிடந்த ஒரு பிணியாளனுக்கு ஒரு அணு கொடுத்தான்—அதை அக்ரமம் என்று கண்டித்த குறும்பன், அரைமணி நேரத்துக்கு முன்புதான் தன் குழந்தைக்கு ஒரு ஆடும் குதிரைப் பொம்மை வாங்க, ஐந்து ரூபாய் பெற்ருன்—நன்கொடையாக.

''அக்ரமம் என்ன செய்தேன்...'' என்று திகைத்துக் கேட்டான் நண்பன். குறும்பன் ''அக்ரமமல்லவா இது? அக்ரமம்மட்டுமல்ல, ஆண்டவனுக்கு விரோதமான காரியமுமாகும். குஷ்டரோகிக்குப் பணம் தந்தாயே, தரலாமா? இந்தப் பாவி பூர்வ ஜென்மத்திலே செய்த கெடுவினைக்காகத்தானே, பகவான் இவனுக்கு இக்கொடு நோயை ஏவித் தண்டிக்கிருர். நீ, இவனுக்குப் பணம் அளித்து, அவன் படும் கஷ்டத்தைக் குறைத்திடுவது, ஆண்டவனுக்கு எதிராகச் செய்

யும் காரியமாகாதா! தர்மப் பிரபு என்று பெயர் எடுக்க வேண்டும் என்ற சூதான எண்ணம் உனக்கு!" என்று குறும்பன் குத்தினான். நண்பன், பதிலேதும் பேசவில்லை—சிரித்தான்—இத்தகைய சிறுமதியாளனையும் நண்பனாகக் கொள்ள நேரிடுகிறதே என்று.

இக் கதைபோல, வெள்ள நிவாரணம், புயல் நிவாரணம் என்ற சாக்கு கூறிக்கொண்டு அரசியல் கட்சிகள் வெளிச்சம்போடும்—அது கூடாது — ஆமாம்! கூடவே கூடாது—என்று கூவிடும் குறுகிய மதிபடைத்தோர்கூட, இருக்கிறார்கள். எது இல்லை நாட்டில்! மலர்த் தோட்டத்திலேயே ஒரு மூலையில் மலம் இருக்கிறதல்லவா! பழத் தோட்டத்திலே ஒரு பொந்தில் பாம்பு இருக்கிறதல்லவா, அதுபோல தன்னாலும் முடிவதில்லை, பிறர் செய்தாலும் பார்த்துச் சகித்துக்கொள்ள மனம் இடம் தருவதில்லை. "இவ்வளவும் மலமாகத்தானே போகிறது" என்று விருந்து சாப்பிடுவோரிடம் கேட்டானும், விரட்டி அடிக்கப்பட்டவன்; அதுபோல் இது ஒரு ரகம்—கிடக்கட்டும். இத்தகைய மந்தமதிக்காரர்களின் மண்டையிலடிப்பதுபோல, பெரியார் புயல் நிவாரணத்துக்கு ஓராயிரம் ரூபாய் நன்கொடை அளித்திருக்கிறார். கெடுமதி எனும் புழு நெளியும் உள்ளத்தினருக்கு தக்கதோர் புத்திமதி புகட்டிடவே பெரியார் இந்த அன்புக் காணிக்கை தந்தார் என்பது மட்டுமல்ல, வந்துற்ற அவதி எவ்வளவு பயங்கரமானது என்பதை அனைவரும் அறியச் செய்ய வேண்டும் என்ற பெரு நோக்கும் இதற்குக் காரணம் என்று கூறவேண்டும். தம்பி! நமது கழகத்தின் சார்பில் ஓராயிரம் தரப்பட்டிருப்பதுபற்றிப் பத்திரிகைகளில் பார்த்திருப்பாய். சென்னையில் நமது பொதுச் செயலாளருடன் நானும், அறிவகத்தின் தொடர்பினை அடிக்கடி கொள்ளும் கழகத் தோழர்கள் சிலரும் பேசினோம்—அவர் பட்டுக்கோட்டை தெரியுமல்லவா—கண் கலங்கிய நிலையில் இருந்தார். கடலில் கடுகு, இந்த ஆயிரம். செய்யவேண்டியது இனி—தொடர்ந்து;—இது உதவி செய்யும் சிலர்களுடன் நாமும் சேருகிறோம் என்பதை எடுத்துக் காட்டும் சிறு அறிகுறி.

தம்பி! முன்பு நாம் நாடகமாடியும் நல்லோரிடமும் கரம் நீட்டியும் நிதி திரட்டினோம்—அப்போது இக்காரியத்தில் ஈடுபட மற்றவர்கள் துடித்தெழுந்து கிளம்பாததால். இம்முறை, நாட்டிலுள்ள நல்லோர் எல்லோருமே, நான், நீ, என்று போட்டியிட்டுக்கொண்டு உதவி திரட்டிட முனைந்திடுகிறார்கள் — மகிழ்கிறேன்—மகிழ்வாய். நாம் அந்த முயற்சியில் நமது பங்கினைச் செலுத்த உடனே முற்பட வேண்டும்.

காங்கிரஸ்காரர்கள், கம்யூனிஸ்டுகள், கழகத்தார்கள், என்று 'அளவுகோல்' போட்டு அளக்கவேண்டிய விஷயமல்ல இது! வீடு, தீப்பற்றிக்கொண்டு எரியும்போது பேரம்பேசுபவன், வீணன். எனவே, துயர் துடைக்கும் எந்த முயற்சியில் யார் நம்முடைய ஒத்துழைப்பைக் கேட்டாலும் தரத்தயாராயிருக்கிறோம்—நம்மாலான உதவிகளைச் செய்யவும் சித்தமாயிருக்கிறோம். ஏனெனில், நிகழ்ந்திருக்கிற நாசம் சாதாரணமானதல்ல, அவதிப்படும் மக்கள் தொகையும் கொஞ்சநஞ்சமல்ல. எனவே, அதன் துயர் களையும் பொறுப்பில், அரசுக்கு வேண்டிய உதவி ஒத்தாசைகளை யாவரும் செய்யவேண்டும்.

அதே சமயத்தில் அரசினரும், பணத்தைப் பணம் என்று பார்க்காமல் இயற்கையின் கோரத்தாண்டவத்துக்குப் பலியானோர் அனைவரின் வாழ்க்கையிலும் விளக்கேற்றி வைக்கும் பெரு முயற்சியிலீடுபட வேண்டும். ஆபத்துக்கு ஆளாகி அல்லற் படுபவர்கள், நமது உடன் பிறந்தோர்கள், இதில் கட்சி பேதம் கலக்கக் காரணமில்லை — கருணையுள்ளம் கொண்ட அனைவரும் ஈடுபட்டு, வழியும் கண்ணீரைத் துடைக்க முயலவேண்டும்-அது தான்', திண்டாடும் நமது சகோதரர்களுக்கு நாம் காட்டக்கூடிய அன்பும் —அனுதாபமும்.

கூட கோபுரங்கள்
மாட மாளிகைகள்
வணிகக் கோட்டங்கள்
சினிமாக் கொட்டகைகள்
நடுத்தர மக்கள் இல்லங்கள்
அலுவலகங்கள்

இங்கெல்லாம், 'ஒரு நாளைய வருமானம் இந்த நிவாரணத்துக்கு என்று ஒதுக்கி, திரட்டி, சர்க்காரிடம் தரும் முயற்சியில் ஆட்சியாளர்களாகியுள்ள கட்சியினரே! பல்வேறு கட்சித் தோழர்களே! பணிபுரிய வாரீர் என்று அழைக்கிறோம்.

அமைச்சர்களே! எல்லா இடங்களிலும் என்று இல்லாவிடினும், சென்னை, கோவை, மதுரைபோன்ற பெருநகர்களில், வீதிகளிலே செல்லுங்கள்! மக்கள் வேண்டிய மட்டும் பணமும் பண்டமும் அளிப்பர். கடை வீதிகளிலே வாருங்கள்! ஆடைகளைக் குவிப்போம், அமைச்சர்கள் மட்டுமல்ல, அருளாளர் ஆதீனகர்த்தர்கள், எவரும் இப்பணிக்கு முன்வருதல் வேண்டும் — அனைவரும் மனிதரன்றோ!

கலை உலகத் தோழர்களே! உமது பணி, இச்சமயம் மிக்க பலனளிக்கும். நிதி திரட்டவும், ஆடைகள் பெறவும், அங்காடிகளிலும் பெருஞ்சாலைகளிலும் அணிவகுத்துச் செல்லுங்கள். பெரு நோக்கும் கருணை வழியும் உள்ளமும் கொண்டவர்கள் கலை உலகில் ஏராளமாக உள்ளனர்; எனவே, அவர்தம் முயற்சிக்குப் பலன் நிச்சயம் கிடைக்கும்.

அனைவரும் பணியாற்றித் தீரவேண்டிய கட்டம்.

இன்றே துவக்குக! என்று வேண்டுகிறோம். தி. மு. க. தோழர்களிடமிருந்து எத்தகைய ஒத்துழைப்பு கேட்பினும், கிடைக்கும் என்று உறுதியளிக்கிறோம்.

தேம்பித் திகைத்துக் கிடக்கும் தோழர்களே! உடன்பிறந்தோரே! இதோ உதவி, இதோ, இதோ என்று கூறிப் புறப்படுக; பணிபுரிக.

ஆமாம், அண்ணா! எல்லாம் சரி, டில்லி என்ன செய்கிறது, என்று கேட்கிறாய், தெரிகிறது, தம்பி! அதுபற்றி இப்போது எண்ணிக் கிடப்பது வேண்டாம். ஏதேனும் செய்யும். இப்போது என் கண்ணுக்கு டில்லி தெரியவில்லை—வெள்ளம், பிணமலை தெரிகிறது — நீயும் நானும் இருக்கிறோம், நம்மாலானதைச் செய்வோம், உடனே புறப்படு! ஒரு பிடி அரிசி, தாயே! ஒரு பிடி அரிசி, என்று கேள். கேள் கொடுக்கப்படும். ஆடை கேள், அளிப்பர் — பழய ஆடையேனும். கோபுர வாயில்களிலேயும் கேட்டுப் பெறலாம், நீ வேண்டாம் தம்பி, குன்றக்குடியாரின் குறுநகையில் பெருமதி கண்டோரெல்லாம் உடனே, தோழர்களுடன் கலந்து பேசு — அமைப்பு ஏற்படுத்து — அன்பு உள்ளம் கொண்டோர்களிடம் சென்று முறையிடு — பலன் நிச்சயம் கிடைக்கும்—பாதிப் பிணமாகக் கிடக்கும் பரிதாபத்துக்குரியவர்களைக் காப்பாற்றிடும் தூய பணியில் பங்கு பெற எவரும் முன் வருவர்—எவரும். நான் என்ன செய்ய வேண்டும் என்பதையும் எனக்குக் கூறு. நாம் என்ன செய்யவேண்டும் என்பதைப் பொதுச் செயலாளருக்குக் கூறு. முறைகூட அல்ல தம்பி! இப்போது முக்கியம், உடனடியாகப் பணியாற்றித் தீரவேண்டியதுதான் முக்கியமானது. உன்னால் முடியும்.

அன்பன்,

**அண்ணாத்துரை.**

காஞ்சிபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் சி. என். அண்ணாத்துரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.